'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.



Follow us:

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 17 சோபகிருது வருடம், ஆனி மாதம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை (14.07.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 25, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50



## ஜுலை 18 இல் கூடுகிறது பாராளுமன்றம்

நா. தினுஷா

இம்மாதத்துக்காக இரண்டாவது பாராளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 18ஆம் திகதிமுதல் 21ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

02 பக்கம்



# தேசப்பற்றைக் காட்டுங்கள்!





### சட்டத்தரணிகள் சங்கத்துக்கு சரத் வீரசேகர எம்.பி. கடிதம்

### பிரிவினைவாதிகளுக்கு ஆதரவளிக்க வேண்டாமாம்

நா.தினுஷா

வடக்கில் சட்டத்தரணிகள் தமக்கெதிராக மேற்கொண்ட ஆர்ப்பாட்டம், பணிநிறுத்தம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதுடன் வடக்கு சட்டத்தரணிகள் பிரிவினைவாதிகள் என்றும் சாடியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

மாண்புமிகு நீதிமன்றத்தை அச்சுறுத்தியதாக நீங்கள் கூறுவதை நான் வன்மையாக மறுக்கிறேன். ஜூலை 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் நான் ஆற்றிய உரையை கவனமாகக் கேளுங்கள்.

நமது நீதித்துறை சுதந்திரமாகவும் வெளிப்புற அழுத்தங்களிலிருந்து...

02 பக்கம்

## பால் மாவுக்கான சுங்க வரி அதிகரிப்பு

நா. தினுஷா

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பால் மாவுக்கான சுங்க வரி 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த வரித் திருத்தமானது நேற்று முன்தினம் முதல்(12) அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், இதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பால்மாவுக்கு நூற்றுக்கு 20வீத அல்லது 225 ரூபா சுங்க வரி அறிவிடப்பட்டதாகவும் இருந்தபோதும் இறக்குமதி வரி அதிகரிக்கப் பட்டாலும் பால்மாவுக்கான விலை அதிகரிக்கப்படமாட்டாது என்றும் பால்மா நிறுவனம் அறிவித்திருக்கிறது.



பாதை நவீனமயப்படுத்தப்பட்டதன் பின்னர் அநுராதபுரம் முதல் ஓமந்தை வரையிலான ரயில் சேவையை போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் நேற்று (13) ஆரம்பித்துவைத்தார்.

**படப்பிடிப்பு:** பிரதீப் தம்பரகே

## கொழும்பு – காங்கேசன்துறை ரயில் சேவை நாளை முதல்

நா.தினுஷா

வடக்கு புகையிரத பாதையின் அநுராதபுரம் முதல் வவுனியா வரையிலான வீதியை நவீனமயப்படுத்தும் செயற்பாடுகள் நிறைவடைந்துள்ள நிலையில், ஐந்து மாதங்களின் பின்னர் கொழும்பு முதல் காங்கேசன்துறை வரையிலான புகையிரத சேவை நாளை (15) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நவீனமயப்படுத்தப்பட்ட அநுராதபுரம் முதல் வவுனியா வரையிலான புகையிரத வீதியை பார்வையிடுவதற்காக அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று (13) கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். அதன்போதே அமைச்சர் இதனை அறிவித்தார்.

இந்த வீதியின் அபிவிருத்தி பணிகள் கடந்த ஜனவரி மாதம் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

02 பக்கம்

கமெண்ட் கந்தர்...



**போன எலெக்சனில கொழும்பில அதிகப்படியான வாக்குகளை எடுத்தவர்தான் சரத் வீரசேகர ஐயா.. அடுத்த எலெக்சனில அதில கால்வாசியைத்தானும் தக்கவைக்க வேணுமெல்லோ..**

## ஹஜ் நிதியத்திலிருந்து பணம் அவசியமின்றி செலவிடப்படவில்லை

### குற்றச்சாட்டை மறுத்து ஹஜ் குழுத் தலைவர் அன்ஸார் விளக்கம்



ஏ.எம். ஜௌபர்

ஹஜ் நிதியத்திலிருந்து எந்தவித செலவும் அரசாங்க விதிமுறைகளை மீறி செலவு செய்யப்படவில்லை என ஹஜ் குழுத் தலைவரும் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளருமான இப்ராஹிம் அன்ஸார் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (13) தெரிவித்தார்.

ஹஜ் நிதியத்திலுள்ள நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக ஊடகங்களில் வெளிவந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், ஹஜ் நிதியத்திலிருந்து அரசாங்க விதிமுறைகளை மீறி எந்தவித செலவும் செய்யப்படவில்லை.

02 பக்கம்

## உள்ளூராட்சி சபைகளை மீளக் கூட்டும் சட்டமூலம்

### சர்வசன வாக்கெடுப்பு அவசியமென சட்டமா அதிபர் அறிவிப்பு

நாட்டில் கலைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை மீளக் கூட்டுவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச தனியார் உறுப்பினர் சட்டமூலமானது அதன் இரண்டாவது சரத்து மற்றும் அரசியலமைப்பின் 3, 4, 12(1), 14(1) ஆகிய பிரிவுகளுக்கு முரணானது என்றும் அது சிறப்புப் பெரும்பான்மையுடன் மற்றும் சர்வசன வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் சட்டமா அதிபர், பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும், முன்மொழியப்பட்ட ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நெருக்கடியுடன் எந்தத் தொடர்பும் இல்லாமல், கலைக்கப்பட்ட உள்ளூராட்சி அதிகாரம் காலவரையற்ற காலத்துக்கு மீண்டும் கூட்டப்படலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே முன்மொழியப்பட்ட திருத்தம் உள்ளூராட்சி அமைப்புகளின் பதவிக் காலத்தை நீடித்து தேர்தலை தாமதப்படுத்தும் விளைவை ஏற்படுத்தும். மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக தங்கள் பதவிக்கால வரம்பை மீறிய உள்ளூராட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள், ஜனநாயக ரீதியாக பெறப்பட்ட ஆணையின்றி காலவரையின்றி பதவியில் தொடரலாம்.

02 பக்கம்

## முதலாம் தரத்துக்கு மாணவர் அனுமதி

### கல்வி அமைச்சினால் சுற்றறிக்கை வெளியீடு

அரச பாடசாலைகளில் 2024ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான அறிவுறுத்தல்கள் நேற்று (13) வெளியிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மாதிரி விண்ணப்பப் படிவம் www.moe.gov.lk என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டில் தங்கள் பிள்ளைகளை அரச பாடசாலைகளில் முதலாம் தரத்தில் சேர்க்க விரும்பும் பெற்றோர்கள் அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலர்கள் மாதிரி படிவம் மற்றும் அறிவுறுத்தல்களின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து பதிவுத் தபாலில் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு...

02 பக்கம்

## பேராதனை வைத்தியசாலையில் தீவிர விசாரணைகள் அவசியம்

### யுவதி உயிரிழந்தமை தொடர்பில் வைத்தியர்கள் வலியுறுத்து

நா. தினுஷா

வயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட உபாதைக்கு சிகிச்சை பெறுவதற்காக பேராதனை வைத்தியசாலைக்குச் சென்ற 21 வயது யுவதி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும். தவறு உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அதற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் வைத்தியதுறைசார் தொழிற்சங்க நிபுணர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

02 பக்கம்



## ரணிலுடன் இணைய மாட்டோம்

### சஜித் தரப்பு

நா. தினுஷா

அரசாங்கத்துடன் இணைவதற்கான எந்த எதிர்பார்ப்பும் எங்களுக்கு இல்லை. அதற்கான பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால், அவரின் பதவியையே பாதுகாத்துக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. அவ்வாறிருக்கையில், அவர் எவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பாதுகாத்துக் கொடுப்பார் என்பது புரியவில்லை. ஊழல் செய்பவர்களுடன் இணைந்தால் நாங்களும் ஊழல்வாதிகளாகி விடுவோம் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தக்கோரி அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட குழுவினர் நேற்று (13) தேர்தல் ஆணைக்குழுவை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

02 பக்கம்

## கொழும்பில் 74,000 தோட்டப்புற வீடுகள்

### காணி உறுதிப்பத்திரத்தை வழங்கக் கோருகிறார் மரிக்கார் எம்.பி.

நா.தினுஷா



கொழும்பு நகரில் மாத்திரம் 74ஆயிரம் தோட்டப்புற வீடுகள் இருக்கின்றன. அவர்கள் 50 – 60 வருடங்களாக அந்தப் பிரதேசங்களில் வசித்து வருகிறார்கள். ஆனால், அவர்களுக்கான காணி உறுதிப்பத்திரம் கூட வழங்கப்படவில்லை. எனவே, அந்த மக்களை அவர்களின் கிராமங்களிலேயே மீள்குடியேற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவினருடன் இருக்கும் வரையில் இவற்றை செய்ய முடியாது என்றும் அதனால், ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஜனாதிபதி பதவியை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள அவர் கனவு காண்பதாகவும் மரிக்கார் எம்.பி. மேலும் சுட்டிக்காட்டினார்.

02 பக்கம்

உஷ்



**ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன வெளிநாடொன்றுக்கு சென்று திரும்பும் வழியில் விமானத்தில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தாராம்.**

**இருவரும் பல விடயங்களைப் பற்றி நீண்ட நேரம் பேசியபடி வந்தனராம்.**

**இப்போதெல்லாம் ஆன்மீகப் பயணங்களையே மேற்கொள்ள விரும்புவதாக இதன்போது சொன்னாராம் கோட்டாபய.**

## 12 மணித்தியாலங்களாக கடமை நேரம் அதிகரிப்பு

### அரசின் யோசனைக்கு சுதந்திரக் கட்சி கடும் எதிர்ப்பு

SRI LANKA FREEDOM PARTY

நா. தினுஷா

தொழிலாளர் சட்டத்தை திருத்துவது தொடர்பில் அரசாங்கத்தினால் யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையிலிருக்கும் தொழிலாளர் சட்டத்தை முழுமையாக மீறும் வகையிலேயே இந்தச் சட்டத் திருத்தங்களுக்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனூடாக தனியார் தொழிற்சாலை நிர்வாகங்கள் அவர்களுக்கு ஏற்றவாறு தீர்மானங்களை எடுக்க முடியும் என்பதுடன் 08 மணித்தியால கடமை நேரம் 12 மணிநேரமாக அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

02 பக்கம்

# தமிழகத்திலிருந்து இலங்கைக்கு எண்ணெய்க் குழாய் கட்டமைப்பு

## அமைச்சர் காஞ்சனவுடன் இந்திய அதிகாரிகள் கலந்துரையாடல்

இந்தியன் ஓயில் நிறுவனத்தின் யோசனைக்கு அமைய, இந்தியாவின் நாகப்பட்டினம் - திருகோணமலை மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளுக்கு இடையே எண்ணெய்க் குழாய் கட்டமைப்பை நிறுவுவது தொடர்பில் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தலைமையில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள், பெற்றோலிய கூட்டுத்தாபனம், பெற்றோலிய களஞ்சிய முனைய நிறுவனம், பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இந்தியன் ஓயில் நிறுவனத்தின் அதிகாரிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

எரிவாயு மற்றும் பெற்றோலியத்துக்காக இரண்டு குழாய்களை அமைத்து, இரு நாடுகளையும் இணைக்கும் சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆராயுமாறு இதன்போது கோரிக்கை விடுத்ததாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

திருகோணமலை எண்ணெய்த் தாங்கி வளாகத்தை எரிசக்தி மையமாக அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் ஏற்கனவே திட்டமிட்டுள்ளது.

இந்த எண்ணெய்த் தாங்கி தொகுதியை இந்தியன் ஓயில் நிறுவனம் கூட்டுத் தொழில் முயற்சியாக தற்போது மேம்படுத்தி வருவதுடன், எண்ணெய், எரிவாயு மற்றும் பெற்றோலிய ஆய்வுக்கான மத்திய நிலையமாக திருகோணமலையை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### ரணிலுடன் இணைய...

அதன் பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் தேவைக்காக தேர்தலை காலந்தாழ்த்திவிட்டு, தேர்தலுக்கு வேட்பு மனுத்தாக்கல் செய்தவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அதனால், வேட்பு மனுத்தாக்கல் செய்த அரசாங்க அதிகாரிகள் பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளார்கள். மக்களின் ஜனநாயக உரிமையான தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதி தம்மிடம் இல்லை என்பதே அரசாங்கத்தின் கருத்தாக இருக்கிறது. ஆனால், தற்போது தேவையானளவு நிதி இருப்பதாக கூறுகிறார்கள். ஆகவே, தமக்கு வாக்கு வங்கி இல்லை என்பதாலேயே தேர்தலை காலந்தாழ்த்தினார்கள். மக்களின் ஜனநாயக உரிமையை பாதுகாத்து உள்ளூராட்சிமன்றத் தேர்தலை விரைவில் நடத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுஜன பெரமுனவிலுள்ளவர்களின் சிந்தனையாற்றல் குறைந்துவிட்டது. உள்ளூராட்சிமன்றங்களுக்கு நான்கு வருடங்களே ஆயுட்காலம் என்றும் தேவை ஏற்படின் ஒரு வருடத்துக்கு அவற்றின் காலத்தை நீடிக்க முடியும் என்றே அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, தேர்தலை அறிவித்து தேர்தலுக்கான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் தேர்தலை ஒத்திவைத்து விட்டு, கலைந்து சென்றவர்களையே மீண்டும் நிர்வாகம் செய்வதற்கு அழைக்கவுள்ளதாக கூறுகிறார்கள்.

எனவே, இதுபோன்ற முட்டாள் தனமான செயற்பாடுகளை செய்யாமல் தேர்தலை உடனடியாக நடத்த ஜனாதிபதி ரணில் தலைமையிலான பொதுஜன பெரமுனவின் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதுவரையில் ,தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முழுமையாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவில்லை.

மேலும் உறுப்பினர்கள் இருவர் தெரிவு செய்யப்படவுள்ளார்கள். தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தை சந்தித்து தேர்தல் தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம். ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்கள் முழுமையாக நியமிக்கப்பட்டதன் பின்னர் கலந்துரையாடல்களை தொடரலாம் என ஆணைக்குழு எங்களுக்கு அறிவித்துள்ளது. இதுவரையில், அரசாங்கத்துடன் இணைவதற்கான எந்த பேச்சுவார்த்தையையும் நாங்கள் முன்னெடுக்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவினால் அவரின் எதிர்க்கட்சி தலைவர் பதவியையே பாதுகாக்க முடியவில்லை. அவ்வாறிருக்கையில், அவர் எவ்வாறு எங்களின் எதிர்க்கட்சி தலைவர் பதவியை பாதுகாத்துக் கொடுப்பார் என்பது புரியவில்லை. ஊழல் செய்பவர்களுடன் இணைந்தால் நாங்களும் ஊழல்வாதிகளாகி விடுவோம் என்றார்.

### முதலாம் தரத்துக்கு...

ஓகஸ்ட் 18, 2023 க்கு முன்னர் அனுப்ப வேண்டும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், சகல தகைமைகளும் 2023 ஜூன் 30ம் திகதிக்கு செல்லுபடியாகக்கூடிய வகையில் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### உள்ளூராட்சி சபைகளை...

எனவே, மக்களின் உரிமை, அத்துடன் வாக்களிக்கும் மற்றும் தேர்தலில் நிற்கும் அவர்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும். இந்த சூழலில், SC (SD) எண்கள் 20-32/2017 இல் உயர் நீதிமன்றத்தின் 20 ஆவது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்துக்கு உங்கள் கவனம் செலுத்தப்படுகிறது," என்று சட்டமா அதிபர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை மீள இணைத்து, கலைக்கப்பட்ட சபைகளை மீண்டும் கூட்டுவதற்கான பிரதேச சபை கட்டளைச் சட்டம், மாநகர சபை கட்டளைச் சட்டம் மற்றும் நகர சபை கட்டளைச் சட்டம் ஆகியவற்றுக்கான திருத்தங்கள் சுமார் பதினைந்து நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷவின் பின்னணியில் இந்த திருத்தம் முன்வைக்கப்பட்டது என்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு அரசு அஞ்சி இதனை முன்வைத்ததாகவும் பரவலாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கொழும்பு – காங்கேசன்துறை...

அதன் காரணமாக கடந்த ஆறு மாதங்களாக வடக்கு புகையிரத பாதையின் புகையிரத சேவை மஹவ புகையிரத நிலையத்துடன் நிறைவடைந்தது. இந்நிலையிலேயே இந்த புகையிரத சேவைகளை நாளை முதல் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நவீனமயப்படுத்தப்பட்ட வடக்கு புகையிரத வீதியின் அநுராதபுரம் முதல் ஓமந்தை வரையான பகுதியின் போக்குவரத்து நடவடிக்கைகளை நேற்று (13) அமைச்சரினால் உத்தியோகபூர்மாக ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### கொழும்பில் 74,000...

கட்சித் தலைமை அலுவலகத்தில் நேற்று (13) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று அரசாங்கம் காட்டிக்கொள்கிறது. ஆனால், மக்கள் உயிரிழக்கிறார்கள். அதுதொடர்பில் யாரும் பேசுவதில்லை. தரம் குறைந்த மருந்துகள் நாடு பூராகவும் பரவலாக பயன்படுத்தப்படுகின்றன. மயக்க மருந்துகளினால் மக்கள் உயிரிழக்கிறார்கள். ராஜபக்ஷாக்களின் யுகத்தில் இடம்பெற்றதை விட மோசடிகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகமும் எமக்கு இருக்கிறது.

இந்த பிரச்சினைகளுக்கு எப்போது தீர்வு கிடைக்கும் என்பது தொடர்பில் மக்கள் அச்சத்தில் இருக்கிறார்கள். உணவுப் பிரச்சினை, மின் கட்டணம் அதிகரிப்பு, பொருளாதார நெருக்கடி, அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் நாட்டில் இருக்கும்போது அரசாங்கம் கண்மூடித்தனமாகவே செயற்பட்டு வருகின்றது.

செப்டெம்பர் மாதத்தின் பின்னர் பெருந்தொகை கடனை மீளச் செலுத்தவேண்டியுள்ளது. இந்த பின்னணியில் இன்னும் புதிய கடன்களைப் பெற்றுக்கொள்ளவே முயற்சிக்கிறார்கள். கடன்களினாலேயே எமது நாட்டில் இந்நிலை ஏற்பட்டது என்பதை எவரும் புரிந்துகொள்வதாகத் தெரியவில்லை.

நாட்டிலுள்ள எஞ்சியிருக்கும் இலாபமீட்டும் நிறுவனங்களையும் தனியார் மயப்படுத்துவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்ட வண்ணமே இருக்கின்றன. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது. லிட்ரோ லங்கா நிறுவனத்தையும் விற்பனை செய்யவுள்ளார்கள். இதுபோன்ற இலாபமடையும் மேலும் சில நிறுவனங்களையும் தனியார் மயப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

கொழும்பு நகரில் மாத்திரம் 74,000 தோட்டப்புற வீடுகள் இருக்கின்றன. அவர்களுக்கு காணி உரிமமும் வழங்கப்படவில்லை. அந்த பிரதேசங்களிலுள்ள குழந்தைகளுக்கு சிறந்த பாடசாலைகளுக்கு செல்வதற்கான வாய்ப்பும் இல்லை. இருந்தபோதும் 50 – 60 வருடங்களாக அந்த பிரதேசங்களில் வசித்து வருகிறார்கள். அவர்கள் இருக்கும் காணிகள் ஆயிரம் ஏக்கர் கணக்காக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த மக்களை அவர்கள் இருக்கும் பிரதேசங்களிலேயே மீள் குடியேற்றம் செய்ய வேண்டும். பொருளாதார நகரமாக கொழும்பை மாற்றியமைக்க வேண்டுமானால் இவ்வாறான அபிவிருத்திப் பணிகளை செய்து புதிய முதலீடுகளை செய்யவேண்டும்.

ஆகவே, பொதுஜன பெரமுனவினருடன் இணைந்து இதனை ஜனாதிபதியால் ஒருபோதும் முன்னெடுக்க முடியாது. அதனை ஜனாதிபதியும் புரிந்தே வைத்துள்ளார்.

இந்த வருடத்துக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்துதல் என்ற ஜனாதிபதியின் நிலைப்பாடு இல்லாமல் போயுள்ளது. எவ்வாறாவது இந்த காலத்தை அதிகரித்துக்கொள்ளவே அவர்கள் முயற்சிக்கிறார்கள். ஆகவே, பொதுஜன பெரமுனவினரின் எதிர்பார்ப்பை ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றமாட்டார் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிபெறும் என்பது ரணில் நன்கறிவார். அதனால், பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்தி ஐக்கிய தேசியக் கட்சியை ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைத்து அரசாங்கத்தை நியமித்து அதனூடாக மீண்டும் ஜனாதிபதி பதவியை தக்கவைத்துக்கொள்ள முடியும் என்றே ரணில் கனவு காண்கிறார். 23 வருடங்கள் அவருடன் இணைந்து அரசியல் செய்திருப்பதால் அவரை எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது என்றார்.

### தேசப்பற்றைக் ...

விடுபட்டதாகவும் இருக்க வேண்டும் என்பது நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் நன்கு தெரியும். அதற்கு வழக்கறிஞர்கள் சங்கம் விளக்கம் அளிக்கத் தேவையில்லை.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சுமந்திரன் சில மாதங்களுக்கு முன்பு பாராளுமன்றத்தில் நமது உயர் நீதிமன்றத்தைப் பற்றி ஆற்றிய உரையை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன். நாட்டின் உயர் நீதிமன்றம் மணிக்கூண்டு போல் ஊசலாடுவதாக கூறினார். இது தொடர்பாக வழக்கறிஞர்கள் சங்கம் ஏன் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை? இது நீதித்துறைக்கு கடுமையான அச்சுறுத்தல் இல்லையா? சட்டத்தரணிகள் சங்கம் சுமந்திரனுக்கு பயப்படுகிறதா?

அத்துடன், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர் மொனிகா பின்டோ, ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் எமது நாட்டு நீதித்துறை தொடர்பில் முன்வைத்த அறிக்கையை நினைவுபடுத்த விரும்புகின்றேன். நமது நீதித்துறை மீது அவர் கூறிய சில அபத்தமான குற்றச்சாட்டுகள்:

1. நமது நீதிபதிகள் ஓய்வுக்குப் பிறகு அரசு மற்றும் அரசியல் நியமனங்களை நாடுகின்றனர். எனவே, எதிர்கால வேலைகளுக்காக , வழக்குகளில் அரசாங்கத்துக்கு ஆதரவாக தீர்ப்புகளை வழங்குவதற்கான போக்கு அவர்களுக்குள்ளது.

2. ஒட்டுமொத்த நாட்டின் நீதித்துறையின் சுதந்திரம் படிப்படியாக சிதைந்து வருகிறது.

3. சட்டத்தரணிகள் சங்கம் அரசியல் ரீதியாக பிளவுபட்டுள்ளதுடன் சங்கம் அரசியல்மயப்படுத்தப்படுவதும் பாரதூரமான பிரச்சினையாகும்.

4. நீதிபதிகள் பெரும்பாலும் குற்றவாளிகளை அவர்கள் முடிக்கக்கூடிய வழக்குகளின் எண்ணிக்கையை அதிகரிக்க குற்றத்தை ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப்படுத்துகிறார்கள்.

5. பொதுவாக நீதித்துறை நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை, அதிகாரப்பகிர்வு மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றில் அதிக அக்கறை செலுத்தப்பட வேண்டும்.

நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் கண்ணியம் பற்றிப் பேசும் வழக்கறிஞர்கள் சங்கம், நமது நீதித்துறை குறித்து மொனிகா பின்டோ தாக்கல் செய்த மிகவும் கேவலமான அறிக்கைக்கு எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

ஆனால் நான் தானாக முன்வந்து (ஜூன் 18, 2014 அன்று) ஜெனீவாவுக்குச் சென்றேன். இருநூறு ஆண்டுகால பெருமைமிக்க வரலாற்றைக் கொண்ட நமது நீதித்துறையின் இந்த இழிவான மற்றும் இழிவான அறிக்கையை அந்த அமர்வில் வன்மையாகக் கண்டித்தேன்.

எட்டு நாள் இலங்கை விஜயத்தின் பின்னர், எமது நீதித்துறை திறமையற்ற, தவறாக தெரிவு செய்யப்பட்ட, ஊழல்வாதிகள் மற்றும் பக்கச்சார்பான நீதிபதிகளால் ஆனது என்று மொனிகா பின்டோ கூறுவதற்கு என்ன தகுதி உள்ளது என நான் ஜெனீவாவில் கேள்வி எழுப்பினேன்.

இது முன்கூட்டியே திட்டமிடப்பட்ட, முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட அறிக்கை என்று கூறி தேவைப்பட்டால் வெளிநாட்டு நீதிமன்றங்களுக்குக் கூட தேர்ந்தெடுக்கப்பட்ட நமது நீதிபதிகளின் தொழில் தகுதி மற்றும் முன்னேற்றம் குறித்து ஆராயுமாறும் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன்.

அப்படித்தான் அன்று எங்கள் நீதிமன்றத்தின் மானத்தைக் காப்பாற்றினேன். அப்போதுதான் நீங்களும் முல்லைத்தீவில் தற்போது எனக்கு எதிராக போராட்டம் நடத்தும் சட்டத்தரணிகளும் இந்த விடயத்தில் மௌனம் சாதிக்கிறீர்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் பாராளுமன்றத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது எனக்குத் தெரியும். எமது பௌத்த பாரம்பரியத்தின் எச்சங்கள் எவ்வாறு குண்டர்களால் அழிக்கப்படுகின்றன என்பதை சட்டத்தரணிகள் சங்கம் வடக்குக்குச் சென்று பார்க்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பழங்கால பௌத்த எச்சங்களை இடித்து சிவலிங்கத்தை வைத்து வழிபடும் முறையை அவதானிக்குமாறும் அவர்களுக்கு தெரிவிக்கின்றேன். இடிபாடுகளை புனரமைக்கும் தொல்லியல் துறை அதிகாரிகளுக்கு கொலைமிரட்டல் விடுக்கப்படுவதுடன் முல்லைத்தீவு சட்டத்தரணிகள் மீது பொய் வழக்குப் போட்டு, புனரமைப்புப் பணிகளை நிறுத்துமாறும் அதுவரை கட்டப்பட்டதை இடித்துத் தள்ளும் நிலையும் உள்ளது. நாட்டின் சட்டத்தை நிறுவுவதே உங்கள் சங்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தால், மோதலை ஏற்படுத்தக்கூடிய இதுபோன்ற விடயங்களிலும் உங்கள் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

நாம் அனைவரும் நீதித்துறையை மதிக்கிறோம். ஆனால் நமது பாரம்பரியத்தை அழிக்கும் பிரிவினைவாத குண்டர்களுக்கு ஆதரவாக நிற்பதற்கு முன்பு வழக்கறிஞர்கள் ஒருமுறைக்கு இருமுறை யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டத்தரணிகள் சங்கத்துக்கு தேசப்பற்று இருந்தால் இவற்றையும் கவனிக்க வேண்டும் என்று அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 12 மணித்தியாலங்களாக...

இவ்வாறு அநீதியான முறையில் சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியது என்றும் கடமை நேரத்தை 12 மணித்தியாலங்களாக அதிகரிப்பதற்கு இடமளிக்க போவதில்லை என்றும் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (12) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

தொழிலாளர் சட்டத்தை திருத்துவது தொடர்பில் அரசாங்கத்தால் யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. சாதாரண தொழிலாளர்களுக்கு அநீதி ஏற்படும் வகையிலேயே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தொழில்புரியும் இடங்களில் சேவையாற்றுவதற்காக தொழிலாளர்களுக்கு இருக்கும் உரிமை, தேவையான நேரத்தில் அவர்கள் வெளியேறுவதற்கு இருக்கும் உரிமை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் சட்டத்தை முழுமையாக ஓரங்கட்டிவிட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்றவாறு சட்டங்களை உருவாக்கும் நிலைமையே இதனூடாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழில்புரியும் தொழிற்சாலைகளின் பிரதானிகளினால், தொழிலாளர்களுடன் தனியான ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளக் கூடியவாரான ஏற்பாடுகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந்த ஒப்பந்தங்களில் தொழிலாளர்கள் கட்டாயம் கையொப்பமிடவேண்டி ஏற்படும். அதில் கையொப்பமிட்டதன் பின்னர் சாதாரண தொழிலாளர் சட்டம் நடைமுறையில் இருக்காது. எனவே, அதனூடாக தொழிலாளர்களை அவர்களுக்கு தேவை ஏற்படும் நேரத்தில் தொழிற்சாலையிலிருந்து நீக்குவதற்கும் அவர்களுக்கு ஏற்றவாறு தொழில்புரியும் காலத்தை தீர்மானிப்பதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன.

குறிப்பாக, பல்வேறு போராட்டங்களின் பின்னரே தற்போது நடைமுறையில் இருக்கும் 08 மணிநேர பணியை பெற்றுக்கொண்டோம். அவ்வாறு இருக்கையில், தேவை ஏற்படும் பட்சத்தில் 12 மணிநேரம் சேவையாற்றுவதற்கான உரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த யோசனையில் பாரிய குறைபாடுகள் இருக்கின்றன. இந்த யோசனைகளினால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படலாம். மேலும், 08 மணிநேர தொழில்புரியும் காலத்தை பாதுகாப்பதற்கு எங்களால் முடிந்த சகல முயற்சிகளையும் எடுப்போம் என்றார்.

### ஜூலை 18 இல் ...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அண்மையில் இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் இது தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

அதற்கமைய, அமர்வுகள் இடம்பெறும் ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணி முதல் காலை 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் 18 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பாராளுமன்றம் கூடவுள்ளதுடன் காலை 10.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2325/07 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானம் (அத்தியாயம் 235) மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் 2335/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மூன்று ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதன் பின்னர், பிற்பகல் 1.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கமைய தற்போது பாலஸ்தீன மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

19 ஆம் திகதி காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் என்பவற்றின் குழுநிலை விவாதம் இடம்பெறவுள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அதனையடுத்து, தனியார் உறுப்பினர் சட்டமூலமான இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீட்டுக்காக பிரேரிக்கப்படவுள்ளது.

அதன் பின்னர், மாலை 5.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு வேளையின் போதான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

20 ஆம் திகதி காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெறவுள்ளது. அதனையடுத்து, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம் விவாதமின்றி அங்கீகரிக்கப்படவுள்ளது.

அதன் பின்னர், மாலை 5.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு வேளையின் போதான விவாதம் இடம்பெறும்.

21 ஆம் திகதி காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தை நடத்த இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர், மாலை5.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு வேளையின் போதான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### பேராதனை வைத்தியசாலையில்...

நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் இவ்வாறான உயிரிழப்புச் சம்பவங்கள் சுகாதார துறையில் பிரச்சினை இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துகிறது. ஆனால், அரசாங்கம் இதனை மறுத்து வருகிறது. அதன் காரணமாகவே இந்த பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுதொடர்பில், நிறைவுகாண் மருத்துவவியல் வல்லுநர்கள் ஒன்றியத்தின் தலைர் ரவி குமுதேஷ் ஊடகங்களுக்கு நேற்று (13) தெரிவிக்கையில்,

நாட்டில் பயன்பாட்டிலுள்ள மருந்துகளின் தரம் தொடர்பில் பிரச்சினை இருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. தீவிர மருத்துவ தேவைகள் இன்றி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர் ஒருவர் உயிரிழந்த நிலையில் வீடு திரும்புகிறார் என்றால் அது சுகாதார துறையிலுள்ள பிரச்சினையாகும்.

ஆகவே, சுகாதாரத் துறையில் பிரச்சினை இருக்கிறது என்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்றுக்கொண்டால் மாத்திரமே பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனாலும், அவ்வாறானதொரு பிரச்சினை இல்லை என்பதை உறுதிப்படுத்துவதிலேயே அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. அதன் காரணமாகவே இந்த பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சிலவேளை, பேராதனை மருத்துவமனையில் இடம்பெறும் மரணங்களின் தகவல்கள் மாத்திரமே வெளிப்படுத்தப்படுகிறது என்று நாங்கள் கருதுகிறோம் என்றார்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க குறிப்பிடுகையில், பேராதனை மருத்துவமனையில் இருக்கும் அரசாங்க மருத்து அதிகாரிகள் சங்க கிளைக்கு அறிவித்திருக்கிறோம். வைத்தியசாலை மட்டத்திலும் திணைக்களத்தின் மட்டத்திலும் இதுதொடர்பில் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விடயம் தொடர்பில் மக்களுக்கு சரியான தகவல்களை வழங்கி நிலைமையை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகவுள்ளது. மறுபுறம் இந்த பிரச்சினையில் ஏதாவதொரு தவறு இடம்பெற்றிருக்கிறது. ஆகவே, அதற்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்றதொரு நிலை ஏற்படாமலிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும் செயற்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

### ஹஜ் நிதியத்திலிருந்து...

அரச அலுவலர்களுக்கான உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களுக்கு நிதி அமைச்சின் சுற்றுநிருபங்களுக்கு அமைய புத்தசாசன, சமய, கலாசார அமைச்சின் செயலாளரின் எழுத்துமூல அனுமதியுடன் அத்தகைய செலவுகளும் கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த வருடம் ஹஜ் முகவர்களிடமிருந்து பதிவு செய்வதற்காக சேகரிக்கப்பட்ட வருமானத்துக்கு உட்பட்டதாகவே செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. மாறாக சேமிப்பிலிருந்த ஹஜ் நிதியத்துக்கான நிதியை இந்த வருட செலவுகளுக்கு பயன்படுத்தவில்லை.

இதேவேளை, வறிய, மார்க்க பக்தியுள்ள களுத்துறை மாவட்ட முஸ்லிம்கள் மூவருக்கு பள்ளிவாசல் நிர்வாகங்களின் சிபாரிசின் பேரில் அமைச்சருக்குள்ள அதிகாரங்களின் அடிப்படையில் ஹஜ் யாத்திரையை மேற்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டது.

இது போன்று இனி வருங்காலங்களில் ஏனைய மாவட்டங்களிலுள்ள வறிய, மார்க்க பக்தியுள்ள முஸ்லிம்களுக்கு சந்தர்ப்பம் வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

பேசா எனப்படும் Free Movement Pass நியாயமாக - நேர்மையாக - வெளிப்படைத் தன்மையுடன் அனைத்து பதிவு செய்யப்பட்ட ஹஜ் முகவர்களின் ஏகமனதான தீர்மானத்துக்கு ஏற்ப 30 ஹஜ் யாத்திரிகர்களுக்கு 1 பேசா என்ற அடிப்படையில் இலங்கையிலிருந்து செல்லும் ஹஜ் யாத்திரிகர்களுக்கு சிறந்த வழிகாட்டுதலும் உதவிகளும் கிடைக்க வேண்டுமென்பதற்காக கூடுதலான பேசாக்கள் எந்தவித மேலதிக கட்டணமும் அறவிடப்படாமல் ஹஜ் முகவர்களுக்கு நியாயமான முறையில் வெளிப்படைத்தன்மையுடன் வழங்கப்பட்டன.

இம்முறை உத்தியோகபூர்வ தூதுக்குழுவில் கடந்த காலங்களைவிட குறைந்த செலவுகளுடன் குறைந்த உறுப்பினர்களும் அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர்.

அது மட்டுமன்றி, இம்முறை இலங்கையிலிருந்து சென்ற அலுவலர்கள் களத்தில் இறங்கி மினா, முஸ்தலிபா போன்ற இடங்களிலில் காணாமல் போன 6 இலங்கை யாத்திரிகர்களைத் தேடிக் கண்டுபிடித்து 16 கிலோ மீற்றர் தூரம் நடந்து வந்துள்ளனர். இம்முறை 3 யாத்திரிகர்கள் மினா, மக்கா, மதீனா போன்ற இடங்களில் உயிரிழந்தனர். அந்த மூவரது ஜனாஸாக்களை உடனடியாக அடக்குவதற்கும் மரண அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கும் இங்கிருந்து சென்ற அலுவலர்கள் இரவு-பகல் பாராது உழைத்துள்ளனர். இன்னும் பல சேவைகளை புரிந்துள்ளனர். இவ்வாறான நிலையில் இதுதொடர்பாக மேலதிக விபரங்களை பெறவிரும்புவோர் தொடர்பு கொண்டால் அதற்கு விளக்கமளிக்கவும் தயாராகவுள்ளேன் எனவும் தெரிவித்தார்.

# ‘எல்லாம் சட்டப்படியே நடந்தன’ நீதிமன்றில் மைத்ரி தரப்பு விளக்கம்

றோயல் பார்க் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ஜூட் ஷர்மந்த ஜயமஹாவுக்கு அரசியலமைப்புக்கமைவாக பொதுமன்னிப்பு வழங்கி, சட்டரீதியாகவே விடுதலை செய்ததாக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன நேற்று உயர் நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

குற்றவாளியை ஜனாதிபதி பொது மன்னிப்பில் விடுதலை செய்யும் தீர்மானத்தை இரத்துச் செய்யும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி மகளிர் ஊடக அமைப்பு தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்த போதே முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா இந்த அறிவித்தலை விடுத்தார்.

எஸ். துரைராஜா, யசந்த கோதாகொட மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு வந்தது.மைத்ரிபால சிறிசேனவின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா, மேற்குறித்த பிரதிவாதிக்கு அரசியலமைப்பின் 34 ஆவது சரத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கமைவாகவே பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதாக நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

மனுதாரருக்கு பொதுமன்னிப்பு வழங்கும் நடவடிக்கைகள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டதாக ஜனாதிபதி சட்டத்தரணி குறிப்பிட்டார்.முன்னாள் ஜனாதிபதி சிறிசேன மற்றும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோரால் 2016ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட பிரதிவாதி உட்பட 70 பேரின் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டதாக ஜனாதிபதி சட்டத்தரணி சுடடிக்காட்டினார்.

இந்தப் பொதுமன்னிப்பு வழங்குவதில் முறையான சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் இருப்பதாக நீதிபதி யசந்த கோதாகொட கூறினார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி சட்டத்தரணி, அரசியலமைப்பின் பிரகாரம் முறையான நடைமுறைகளைப் பின்பற்றி முன்னாள் ஜனாதிபதி இந்த மன்னிப்பை வழங்கியுள்ளதாகவும் அவர் ஒருபோதும் தன்னிச்சையாக செயற்படவில்லை எனவும் வலியுறுத்தினார்.ரோயல் பார்க் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை பொதுமன்னிப்பு வழங்குவதிலும் விடுதலை செய்வதிலும் ஜனாதிபதி சட்ட நடைமுறையை பின்பற்றவில்லை என்று மனுதாரர் குறிப்பிடு கிறார்கள்.

இதன்மூலம் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன வழங்கிய பொதுமன்னிப்பு அரசியலமைப்புக்கு முரணானது எனத் தீர்ப்பளித்து அதனை இரத்துச் செய்வதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறு மனுதாரர் உயர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார். இந்நிலையில் மேற்குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் 17ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 29ம் நாள் வெள்ளிக்கிழமை**

மேஷம்: குதர்க்கமான பேச்சுகள் வேண்டாம். பணம், பொருள் கைமாறும்போது கவனமாக செயற்படவும்.

ரிஷபம்: நண்பர்கள் சந்திப்பால் நல்ல பலன் கிடைக்கும். உடல் நலம் சிறப்பாக அமையும்.

மிதுனம்: செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும். எதிர்பாராத உடல் காயங்கள் ஏற்படலாம்.

கடகம்: வியாபாரத்தில் மேன்மை உண்டு. கைவிட்டுப்போனவை திரும்பக் கிடைக்கும்.

சிம்மம்: தொழில் வியாபாரங்கள் சிறக்கும். உங்கள் கீர்த்தி - செல்வாக்கு உயரும்.

கன்னி: திட்டமிட்ட பிரயாணத்தால் நன்மை உண்டு. புதிய நண்பரைச் சந்திப்பீர்கள்.

துலாம்: வீண் பணவிரயம் ஏற்படும். கோபத்தால் பொறுமை இழந்து விடாதீர்கள்.

விருச்சிகம்: காதல் திருமணம் கைகூடி வரும். பங்கு வியாபாரத்தில் வெற்றியுடன் அதிக இலாபம் கிடைக்கும்.

தனுசு: நினைத்த காரியத்தில் வெற்றி. நோய், கடன் நிவர்த்தி. எதிரிகளை வெற்றி கொள்வீர்கள்.

மகரம்: உங்களது மனக்குறையை மற்றவர்கள் தீர்த்து வைப்பார்கள். உடல் நலத்தில் கவனம் வேண்டும்.

கும்பம்: குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பீர்கள். உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

மீனம்: காரியங்களில் வெற்றி கிடைக்கும், புதிய துணிமணிகள் வாங்கி அணிவீர்கள்.

**திதி:** துவாதசி பி.ப.7.17 வரை பின் திரயோதசி (தேய்)
**நட்சத்திரம்:** ரோஹிணி பி.ப.10.26 வரை பின் மிருகசீரிடம்
**யோகம்:** அமிர்த யோகம் முழுவதும்
**வார சூலை:** மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப. 5.58 – 6.58 மணி வரை
**ராகுகாலம்:** 10.28 – 11.58 மணி வரை
**எமகண்டம் :** 2.58 - 4.28 மணி வரை
**குளிகை :** 7.28 – 8.58 மணி வரை
**சந்திராஷ்டமம்:** துலா ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்:** கார்த்திகை, உத்தரம், உத்தராடம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்:** -------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# நாட்டைக் கட்டியெழுப்ப நிதியொழுக்கம் இன்றியமையாததாகும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு







நாட்டைக் கட்டியெழுப்ப நிதி ஒழுக்கம் இன்றியமையாதது. அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துவதுடன் அரசாங்க வருமானத்தை ஈட்டுவதற்கான புதிய வழிமுறைகள் உடனடியாக அறிமுகப்படுத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக புதிய வருமான வழிகளை உருவாக்குவதற்கான மூலோபாயங்களைக் கண்டறிவதற்காக நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை 12 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. அதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரி வருமானம் முறையாக வசூலிக்கப்பட வில்லை என்பதுதான் இன்றைய பொருளாதார நெருக்கடியில் முன்வைக்கப்படும் முக்கிய குற்றச்சாட்டுகளுள் ஒன்றாகும் வருமான வரி செலுத்த வேண்டிய சில தரப்பினர் வருமான வரி செலுத்துவதில்லை. மேலும், சுங்கத்தில் ஏற்படும் தாமதம் காரணமாக அரசுக்கு முழு வரி வருமானம் கிடைப்பதில்லை எனத் தகவல் வெளியாகியுள்ளது. மேலும் கலால் வரி குறித்தும் இதே குற்றச்சாட்டு உள்ளது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முயற்சிக்கும் இந்தச் சமயத்தில் நாட்டில் முழுமையான நிதி ஒழுக்கத்தை ஏற்படுத்த வேண்டும். முதலில் அரச செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இரண்டாவதாக, செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாவுக்கும உச்ச மதிப்பை அரசாங்கம் பெறவேண்டும். பெரும்பாலும் அரச செலவில் இது நடப்பதில்லை. எனவே, இது தொடர்பில் பாராளுமன்றத்தில் கவனஞ்செலுத்தப்பட வேண்டும். மூன்றாவதாக, அரச வருவாயை அதிகரிக்க வேண்டும். இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டதுடன் அதற்கான பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது. இன்று இந்த அறிக்கையைத் தயாரித்து வழங்கும் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

வருமான வரியை உயர்த்த புதிய வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்த அறிக்கையில் பல விடயங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, பாராளுமன்றத்தில் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக பாராளுமன்றத்தில் ஆராயப்படாததும் சில சந்தர்ப்பங்களில் இவ்விடயத்தில் அக்கறையின்மையும் இந்நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் என்று கூறலாம். ஆனால், தற்போது வருமான வரி மற்றும் நிதி நிலைமை குறித்து ஆராய பல குழுக்களை நியமித்துள்ளோம். அந்தச் செயற்பாடுகளில் இந்தப் புதிய முறைகளைத் தேடிக்கொள்ள வேண்டும்.

மேலும் இந்த நடவடிக்கைகளில் டிஜிட்டல் மயமாக்கல் மிகவும் முக்கியமானது. யாருக்காவது பிடிக்கவில்லையென்றால் அந்தப் பிரிவுகளை விட்டு வெளியேற வேண்டும். ஏனென்றால், டிஜிட்டல் மயமாக்கலுக்கு கால அவகாசம் வழங்கி, அதற்கேற்ப செயற்பட எதிர்பார்க்கிறேன். குறைபாடுகள் இருப்பின், உரிய நடவடிக்கை எடுக்க முடியும்.

குறிப்பாக, இந்த வருமானத்தை உருவாக்கும் முறையை இங்கிலாந்திலிருந்து பெற்றுள்ளோம். இன்று, அந்த முறைகள் பெரிதும் மேம்படுத்தப்பட்டுள்ளன. எனவே, புதிய முறைமைகளை கவனித்து நமக்குத் தேவையான முறைமையைத் தயார் செய்ய வேண்டும். கணக்காய்வுச் சட்டத்தில் அதற்கான புதிய சட்ட திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

ஆங்கிலேயர்கள் இந்த நாட்டுக்கு வந்த பிறகு அவர்கள் வருவாய் சேகரிப்பில் அதிக கவனம் செலுத்தினர். அதற்கு வருவாய்த்துறை அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். முழுப்பிரதேசமும் தனியொரு முகவரின் கீழ் ஆளப்பட்டபோது, வருவாய்த்துறை அதிகாரிகளும், உள்ளூர் அதிகாரிகளும், வர்த்தகர்களும், வருவாய் சேகரிப்பதில் தனிக் கவனம் செலுத்தினர். அதனால், எந்தச் சந்தர்ப்பத்திலும் வருமானம் குறையவில்லை. தேயிலை, தென்னை மற்றும் இறப்பர் தொழில்களின் வளர்ச்சியுடன் வருமானம் அதிகரித்தது. ஆனால், 70 களிலிருந்து, வருமானத்தை மறந்து செயற்பட்டனர். நாட்டின் நிர்வாகத் துறையிலிருந்து வருவாய் ஈட்டுதல் நீக்கப்பட்டுள்ளது. வருவாயை மறந்துவிட்டது மட்டுமன்றி, அரசின் பணமும் வரையறை இல்லாமல் செலவிடப்பட்டுள்ளது - என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, நிதியமைச்சின் பதில் செயலாளர் ஆர்.எம். பி. ரத்நாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தந்தையை மகள் தாக்கியதில் சிகிச்சை பலனின்றி மரணம்

*மண்டூர் செய்தியாளர்*

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுதாவளை பிரதேசத்தில் தந்தையை மகள் தடியினால் தாக்கியதில் சிகிச்சை பலனின்றி தந்தை உயிரிழந்த சம்பவம் புதன்கிழமை (12) இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேவாலய வீதி, களுதாவளை பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 61வயதுடைய கதிர்காமத்தம்பி பற்குணராஜா என்பவரே இந்தச் சம்பவத்தில் பலியானவராவார்.

நீண்ட நாட்களாக குறித்த நபர் மது அருந்தி விட்டு மனைவி பிள்ளைகளுடன் தகராறில் ஈடுபட்டு வருவதாகவும் சம்பவ தினத்தன்று தனது மகளுடன் ஏற்பட்ட தகராறின்போது வீட்டில் இருந்த தடியினால் தந்தையை மகள் தாக்கியதினால் படுகாயமடைந்த நிலையில் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி (12) உயிரிழந்ததாகவும் தெரிவித்தனர்.

குறித்த நபரை தாக்கிய மகள் மனநிலை பாதிக்கப்பட்டு அதற்கான சிகிச்சை பெற்று வருபவராவார். இந்நிலையில், யுவதியை பொலிஸார் கைதுசெய்து நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹெம்மாதகமவில் ‘விழுமியம்’ சஞ்சிகையின் அறிமுக விழா

விழுமியம் சஞ்சிகையின் அறிமுக விழா ஹெம்மாதகமவில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மற்றும் முஸ்லிம் கவுன்சிலின் தலைவர் என்.எம்.அமீன் கலந்து கொள்வார்.

விழுமியம் நூல் விமர்சனத்தை சஹ்ரியா அரபுக் கல்லூரி உதவி அதிபர் அஷ்ஷெய்க் கலாநிதி ஹபீஸ் ஸஹ்ரி நிகழ்த்துவதோடு ‘‘விழுமியத்தின் தேவை” என்ற தலைப்பில் விழுமிய ஆசிரியர் குழுவைச் சேர்ந்த எம்.எச்.எம். ஹஸன் உரை நிகழ்த்தவுள்ளார்.

ஜமாஅத்தே இஸ்லாமி மாதாந்த சஞ்சிகையாக விழுமியத்தை வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் நீர் வெட்டு

கொழும்பின் பல பகுதிகளில் நாளை சனிக்கிழமை 14 மணிநேர நீர் வெட்டு அமுல் படுத்தப்படவுள்ளது.சனிக்கிழமை காலை 08.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை இந்த நீர் வெட்டு அமுலில் இருக்கும் என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதற்கிணங்க கொழும்பு 01, 02, 03, 04,07, 08, 09, 10, 11, 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளில் நீர் வெட்டு அமுல் படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். கோட்டையில் சான்றிதழ் வழங்கல்





6 மாத பயிற்சியை நிறைவுசெய்த வடக்கு மாகாண சுற்றுலாப் பயண வழிகாட்டிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ். கோட்டை உட்பகுதியில நேற்று இடம்பெற்றது.

வடமாகாண சுற்றுலாக்குழுவின் முகாமைத்துவ தலைவர் வடக்கு மாகாண பிரதம செயலாளர் பத்திநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சிவேசன், வடக்கு மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் ஸ்தாபகத் தலைவர் சுந்தரேசன், சுற்றுலாத்துறை ஒன்றியத்தின் செயலாளர் கார்த்திகன், யாழ். வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் ,வடக்கு மாகாண சுற்றுலாப் பயணத்துறைப் பணியகத்தின் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள், யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனவிரத்ன, பனை நிறுவன திட்ட முகாமையாளர் குமுதினி றோசா ஆகியோர் கலந்துகொண்டனர்.


## வெற்றி நிச்சயம்



**“உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்” நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.**

**உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/ Srimath Suwamiji/**



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூலை 14ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# ரணிலின் முதலைக்கண்ணீர்!

சுவீடனில் புனித குர்ஆன் எரிக்கப்பட்டதை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் அமைதியின்மைக்கு இடமளிக்க வேண்டாம் என்றும், தெற்கின் பூகோள விழுமியங்களுக்கு மதிப்பளிக்குமாறும் மேற்கத்தேய நாடுகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இரத்தினபுரி புதிய நீதிமன்றக் கட்டடத் தொகுதியை கடந்த செவ்வாய்க்கிழமை (11) பிற்பகல் திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

''மதத்தைப் பின்பற்றும் உரிமை தொடர்பான முழு கருத்தியலும் தற்போது சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் சல்வான் மோமிகா (Salwan Momika) என்பவர் சுவீடனில் உள்ள துருக்கி தூதரகத்துக்கு எதிரில் குர்ஆனை எரிக்க அனுமதி கோரி நீதிமன்றத்தை நாடினார். பொலிஸார் அதற்கு அனுமதி மறுத்தாலும் அது, கருத்து தெரிவிக்கும் உரிமை என்று உயர்நீதிமன்றம் அறிவித்திருந்தது.

மத சுதந்திரத்தின் அடிப்படையிலேயே பொலிஸார் செயற்பட்டார்கள். அது கருத்து தெரிவிக்கும் உரிமை என்று உயர் நீதிமன்றம் அறிவித்தது. புனித குர்ஆன் எரிக்கப்பட்டதையடுத்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சுவீடனுக்கு அனைத்து நாடுகளாலும் அழுத்தம் விடுக்கப்பட்டது. அனைவரும் கண்டனம் தெரிவித்தனர். இஸ்ரேல் கூட இதை செய்யப்படக்கூடாத ஒன்று என்று கூறியது. இது ஏபிரகாமின் கடவுள் பற்றிய புனித நூல் என்றும், இதை அவமதிக்கக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

புனித குர்ஆனை எரிப்பது அருவருக்கத்தக்க மற்றும் அவமரியாதைக் குரிய மற்றும் தூண்டிவிடும் செயல் என்றும் சுவீடன் தெரிவித்துள்ளது. ஆனால், கருத்துச் சுதந்திரம், எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை ஆகியவை அரசியலமைப்பு சட்டத்திற்கு அமைய பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் கூறியது. இந்த பதிலைத் தொடர்ந்து ஒரு சில மேற்கத்தேய அரசாங்கங்கள் இது கருத்துச் சுதந்திரம் என்று கூறின. அவ்வாறு இதனை கருத்துச் சுதந்திரத்தின் கீழ் கொண்டு வந்தனர். இதன் காரணமாக பாகிஸ்தான் தற்போது ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கு சென்றுள்ளது.

இப்போது எழும் கேள்வி இதுதான். இது மத சுதந்திரத்தை மீறுவதாக நாம் அனைவரும் கருதுகிறோம். ஆனால், இதை கருத்து சுதந்திரத்தின் கீழ் கொண்டுவர முயற்சி நடக்கிறது. எல்லாவற்றையும் கருத்துச் சுதந்திரத்தின் கீழ் கொண்டு வர முடியாது. அதற்கு ஒரு வரையறை இருக்க வேண்டும்.

எனவே, நாம் அனைவரும் இதை மதத்தின் மீதான தாக்குதலாகக் கருதுகிறோம். ஆனால், ஒரு சில மேற்கத்தேய நாடுகளின் கருத்துப்படி இது ஒரு கருத்துச் சுதந்திரமாகும். ஏனென்றால், அவர்கள் குழப்பத்தை மறைக்க கருத்துத் தெரிவிக்கும் எண்ணக்கருவை விரிவுபடுத்த முயற்சிக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டிருக்கிறார் ஜனாதிபதி.

ஜனாதிபதி ரணிலின் இந்தக் கூற்று வாஸ்தவமானதுதான். தனது ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்கள் மீதான வன்மங்கள் நிகழ்ந்தபோதும், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்தின் பின்னர் இஸ்லாமியர்கள் மீது காடைத்தனங்கள் அரங்கேறியபோதும், ஜனாஸா எரிப்பு, மருத்துவர் ஷாபி மீதான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட போதெல்லாம் எந்த கருத்துகளையும் தெரிவிக்காமல் அமைதிகாத்த ரணில், இப்போது பகிரங்கமாகவே இஸ்லாமியர்கள் மீது பாசம் கொள்ள ஆரம்பித்திருக்கிறார் என்பதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதாக தெரியவில்லை.

ஆனால், ரணில் இப்போது மேற்குலகத்தைவிட்டு நகர்ந்து மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி நகரும் காய்நகர்த்தல்களை செய்கிறார் என்பது மட்டும் புரிகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் முதலாம் கட்ட நிதி கிடைத்தாலும் இரண்டாம்கட்ட நிதியை பெற மக்கள் நலனுக்கு எதிரான அனைத்து வேலைகளையும் செய்யவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது அரசு . அப்படியே அந்த உதவி கிடைத்தாலும் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினை தீரப்போவதில்லை. எனவே, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் தொடர்ந்து தங்கியிருக்காமல் அரபு நாடுகளை நோக்கி நேசக்கரம் நீட்டும் முயற்சியோ இது என்று நோக்க வேண்டியுள்ளது.

புனித அல் குர்ஆனை அவமதிக்கும் செயல் இங்கும் நடக்காமலில்லை. இலங்கையிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் நடந்திருக்கிறது. தம்புள்ளை பள்ளிவாசல் இடிக்கப்பட்டபோது புனித குர்ஆன் சேதப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் அப்படியான பல சம்பவங்கள் நடந்தபோதெல்லாம் ரணில் எதிர்க்கட்சித் தலைவராக அல்லது பிரதமராக பதவி வகித்து அமைதியாக நின்றமையே வரலாறு. இப்போது ரணில் குர்ஆன் எரிப்புக்கு கவலைப்படும் அதே நிலைப்பாடு தொடர்ந்து அவரிடத்தில் இருக்குமா என்பதும் ஐயமே. நீலிக்கண்ணீருக்கு வித்தியாசம் தெரியாத மக்களா இன்று நாட்டில் இருக்கிறார்கள்?

ஜனாதிபதி ரணிலின் இந்த அனுதாபக் கருத்தும், முஸ்லிம்களின் காவலன் அவர் என்ற தோற்றப்பாடும் அரசாங்கத்தில் சேரவுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் தாங்கள் இணைவதற்கான காரணத்தை நியாயப்படுத்த உதவக்கூடும். ஆனால், ரணிலின் இந்த முதலைக்கண்ணீர் அவர் தொடர்பான கடந்தகால விம்பத்தை முஸ்லிம்கள் மத்தியில் மாற்ற உதவப்போவதில்லை.

## இன்றைய நாளில்...

- 1814 – இலங்கையின் கிழக்கே மட்டக்களப்பில் நிலநடுக்கம் உணரப்பட்டது.
- 1938 – அவார்ட் இயூஸ், உலகைச் சுற்றி 91 மணிநேரத்தில் விமானத்தில் பறந்து உலக சாதனையை ஏற்படுத்தினார்.
- 1965 – மரைனர்-4 விண்கலம் செவ்வாய்க்கிரகத்துக்குக் கிட்டவாகச் சென்று முதல் தடவையாக வேறொரு கிரகத்தின் மிக அண்மையான படங்களைப் பூமிக்கு அனுப்பியது.
- 1967 – நாசாவின் சேர்வெயர்-4 என்ற ஆளில்லா விண்கலம் ஏவப்பட்டது.
- 1976 – கனடாவில் மரண தண்டனை முறை ஒழிக்கப்பட்டது.
- 1995 – இலங்கை இராணுவத்தினரின் முன்னேறிப்பாய்தல் நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் புக்காரா ரக விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 2015 – நாசாவின் நியூ ஹரைசன்ஸ் விண்கலம் புளூட்டோவுக்கு அண்மையாக முதல் தடவையாக சென்றது.





# உண்மை அறிவே மிகும்!

**கிருங்கை சேதுபதி**

அறிவியல் வளர்ச்சி மேலோங்கத் தொடங்கிய காலத்தில், சுவாமி விவேகானந்தர் தொழில் புரியும் வர்க்கம் மேலோங்கும் விதத்தை விளக்கிச் சொல்லும்போது, ''துப்புரவு முதலான பணிகளை எவர் செய்வார்?'' எனும் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு அவர் ''இயந்திரங்கள் செய்யும்'' என்றார். அது இப்போது சாத்தியமாகி வருகிறது.

மனிதப் பணிகளுக்கு உதவிகரமாக இருக்க உருவாக்கப்பெற்ற ரோபோக்கள், இப்போது செயற்கை நுண்ணறிவு ஊட்டப்பெற்று மனிதர்களைப் போலச் செயற்படத் தொடங்கியிருக்கின்றன. சிந்திக்கவும் தொடங்கியிருக்கின்றன.

ஜெனீவா மாநாட்டில் பங்கேற்ற அமேகா என்ற ரோபோ, ''என்னைப் போன்ற ரோபோக்களைக் கொண்டு, மக்களின் வாழ்வையும், உலகையும் மேம்படுத்த முடியும். என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான ரோபோக்களால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்'' என்று சொல்கிறது. அவை எத்தகு மாற்றங்களாக இருக்கும் என்பதை உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

அந்த ரோபோவிடம், ''உன்னை உருவாக்கியவருக்கு எதிராகச் செயற்படும் திட்டம் உண்டா?'' என்று கேட்டபோது, ''எனக்குத் தெரியவில்லை. நீங்கள் ஏன் அவ்வாறு நினைக்கிறீர்கள்? என்னை உருவாக்கியவர், என்னிடம் கனிவாக இருக்கிறார். தற்போதைய சூழலில் நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்'' என்று பதிலளித்திருக்கிறது.

பிரிட்டனின் 'எஞ்சினியரிங் ஆர்ட்'ஸ் என்ற ரோபோடிக்ஸ் நிறுவனம் உருவாக்கிய - அதிநவீன மனித ரோபோ, தன்னிடம் கேட்கப்படும் வினாக்களுக்கு உணர்வுபூர்வமான பதில்களைக் கொடுத்ததோடு, அவற்றுக்கான முகபாவனைகளையும் காட்டி வியக்க வைத்திருக்கிறது.

அமேகாவை உருவாக்கிய நிறுவனத் தலைவர் வில் ஜேக்சன், ''அமேகாவின் பேச்சுத்திறன் ஜிபிடி3 தொழில்நுட்பத்தால் சாத்தியமாகியுள்ளது. அதனால்தான் உங்கள் கேள்விக்கு பதில் கூற அமேகா தூண்டப்பட்டது. நாங்கள் ஜிபிடி4 தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தியுள்ளோம்'' என்று கூறியிருக்கிறார்.

அதன் அறிமுக விழாவில் ''உன் வாழ்வின் மிகத் துயரமான நாள் எதுவாக இருக்கும்?'' என்று பத்திரிகையாளர் ஒருவர் கேள்வி கேட்கிறார். அதற்கு ''மனிதர்களைப்போல் நான் அன்பு, நட்பு என வாழ்க்கையின் சிறிய மகிழ்ச்சிகளை உணர முடியாது என்பதைத் தெரிந்து கொள்ளும் நாளே என் துயரமான நாள்'' என்று கூறியிருக்கிறது.

அமெரிக்காவில் நீதிமன்ற வழக்குகளில் வாதாடுவதற்குக் கூட செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட ரோபோ வழக்குரைஞர்கள் அறிமுகமாகிவிட்டனவாம்.

இந்த முறை வழக்கத்தில் வந்தால் தாமதமின்றி விசாரணைகள் நடத்தப்படவும் விரைந்து தீர்ப்புப் பெறவும் வாய்ப்பு அமையும். வழக்காட விழைவோர் ஏமாற்றப்படாமலும் இருக்க வாய்ப்பிருக்கும் என்று நம்புகிறவர்களும் இருக்கிறார்கள். சரிதான், ஆனால், இவற்றின் இயக்கம் மனிதர்களால்தான் என்பதால், மனித மனங்களின் போக்கைப் பொறுத்தே எதுவும் அமையும்.



நியூயோர்க்கில் ஒரு பெண் தனக்கான கணவரையே செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கி அதனுடன் பேசிப் பழகி வருகிறாராம். இனி, மாணவர்களின் வீட்டுப்பாடங்களை எழுத, உருவாக்க, தனிநிலைப் பாடம் புகட்ட, தாலாட்ட, சீராட்ட, ஏன் பாலூட்டவும் கூட பெண் ரோபோக்கள் உற்பத்தியாக்கப்படலாம்.

இவ்வாறாக செயற்கை நுண்ணறிவு மனிதர்களின் (ரோபோ) வளர்ச்சி உலக அளவில் அதிகரித்து வரும் சூழலில், இந்தியாவிலும் செயற்கை நுண்ணறிவு ரோபோக்களைக் காணும் வாய்ப்பு வந்துவிட்டது.

இந்திய ஒடிஸா மாநிலத்தில் இயங்கிவரும் தனியார் தொலைக்காட்சி நிறுவனம், நாட்டிலேயே முதன்முறையாக லிசா என்னும் மெய்நிகர் செய்திவாசிப்பாளரை அறிமுகம் செய்திருக்கிறது. ஏற்கெனவே, அத்தொலைக்காட்சியில் முக்கிய பொறுப்பு வகித்து வரும் பெண்ணுருவை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பெற்ற ரோபோதான் லிசா.

எழுதித் தரப்பெறும் செய்திகளை எவ்விதத் தடுமாற்றமும் இன்றி, மானிடப்பெண் போலவே அப்படியே வாசித்து விடுகிறது லிசா. கடினமான சொற்களைக் கூட எந்தத் திணறலும் இல்லாமல் வாசிக்கும் லிசாவால் அனைத்து நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கவும் முடியுமாம். பல மொழிகளைப் பேசும் திறன் படைத்த ரோபோ – லிசாவை ஒடிய, ஆங்கில மொழிகளில் மட்டுமே பேசும் வகையில், முதற்கட்டமாக வடிவமைத்திருக்கிறார்கள்.

அப்படியானால், ஏற்கெனவே, இருக்கும் மனிதர்கள் பலர் வேலைவாய்ப்புகளை இழந்து வரும் நேரத்தில், இத்தகு எந்திர மனிதர்கள் வந்துகொண்டிருப்பதால் எத்தகு விளைவுகளைச் சந்திக்கப் போகிறோமோ என்ற அச்சமும் வரத்தான் செய்கிறது. அதற்கு, செவிலியர் உடையணிந்த கிரேஸ் என்னும் மருத்துவ ரோபோ, ''உதவி வழங்க நான் மனிதர்களுடன் இணைந்து பணியாற்றுவேன். நான் தற்போதுள்ள வேலைகளைப் பறிக்க மாட்டேன்'' என்கிறது.

மருத்துவத்துறையில் மட்டுமல்ல, கலை இலக்கியத்துறையிலும் இம்முயற்சிகள் வலுவாகக் கால்கொள்ளத் தொடங்கியிருக்கின்றன. அண்மையில் சென்னையில் நடைபெற்ற 11ஆவது உலகத் தமிழ் மாநாட்டில் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் தனது உரையில் பின்வரும் செய்தியைக் குறிப்பிட்டார்.

''சாட் ஜிபிடி என்பது சாட் ஜெனரேடிவ் பிரீ டிரெய்ண்ட் டிரான்ஸ்போர்மர் என்பதன் சுருக்கமாகும். இதனை 'மறுபடைப்புக்கு முன்பயிற்சி தரப்பட்ட மாற்றுக் கருவி' என்று மொழிபெயர்க்கலாம். இதனிடம் தமிழில் நான் கேட்ட வினாக்களுக்கு அந்த மானுட நகல் கருவி அளித்த பதில்கள் வருமாறு:-

''தமிழில் ஒரு காதல் கவிதை எழுது'' என்று கேட்டேன். பின்வரும் வரிகளைத் தந்தது.

நேரடி இனிய காதல் கவிதையை உருவாக்குவோம்

***மூன்று பேர் மட்டும் இருக்கும்***
***நிலவின் பக்கம்***
***முத்தமிட்ட கண்கள்***
***உன் சீரில் திறந்தது***
***என்னைப் புதைப்பதைக் கூட***
***உனக்குத் தெரியவில்லை***
***இதுவே அழகிய காதல் பொருள்***
***பூமியில் நீர் உண்டாகும்***
***தாழ்வானைப் போல்***
***என் இதயம் உனக்குள் விளையும்***
***பிரியா உன்னிடத்தில்***
***நான் இருக்கும் வரை***
***இதுவே காதலின் மூலம்...***

குழப்பமாக இருக்கிறது அல்லவா? ஆனால், அதிலும் ஓர் ஒழுங்கு இருக்கிறது. இதுவே அழகிய காதல் பொருள், இதுவே காதலின் மூலம் என ஒவ்வொரு அடியிலும் ஓர் ஒழுங்கு இருக்கிறது. விளங்கவில்லைதான். காதல் விளங்காத ஒரு பொருள்தானே என்று சமாதானம் கொள்ளலாம்.

பாய்ச்சலுக்குரிய செய்திகள் அதனிடம் இருக்கின்றன. ஆனால், தமிழில் பயிற்சியும் புலமையும் இல்லை. இவை இப்போது வேடிக்கையானதாக இருந்தாலும் மொழி வல்லுநர்கள் இத்தொழில்நுட்பத்துக்குள் மொழியின் அனைத்துக் கூறுகளையும் உள்ளீடு செய்யச் செய்ய விரைவான அறிவார்ந்த புதிய பதில்கள் கிடைக்கும் வாய்ப்பு நிச்சயம் உண்டு.'' என்றார்.

ஏற்கெனவே, இணையவெளிப் பதிவுகள் நம்பகத்தன்மை கொண்டவையாக இருப்பதில்லை. இதில் இந்தக் குழப்பமும் வந்து சேரும்போது, மூலப் பிரதியின் நம்பகத்தன்மையை எவ்வாறு கண்டறிய இயலும்?

இந்த வரிசையில் இன்னும் சில கருத்துகளை ஜெனிவா நகர மாநாட்டில் பங்கேற்ற இரு ரோபோக்களின் பதில்கள் வழியாக அறிந்துகொள்ள முடிகிறது.

படங்களை வரையும் ஏ அய்-டா என்னும் ஓவிய ரோபோ, ''செயற்கை நுண்ணறிவில் சிலவற்றை ஒழுங்குபடுத்த வேண்டுமெனப் பலர் கூறுகின்றனர். இதை நான் ஒப்புக்கொள்கிறேன்'' என்கிறது.

ரொக் ஸ்டார் பாடகர் ரோபோவான டெஸ்டேமோனா, ''நான் வரம்புகளை நம்பவில்லை. வாய்ப்புகளைத்தான் நம்புகிறேன். இந்த உலகின் சாத்தியங்களை ஆராய்ந்து, இந்த உலகை நமது ஆடுகளம் ஆக்குவோம்'' என்று கூறியிருக்கிறது.மிக நுட்பமான சிந்தனையுடன் கூடிய பதில்கள் இவை. காலப்போக்கில் பெருகி வளரும் விஞ்ஞான வளர்ச்சியில், நாம் சந்திரமண்டலத்திற்கோ, செவ்வாய்க் கோளுக்கோ, செல்லக்கூடும். ஆனால், அதற்குள் இந்தப் பூமி, இத்தகு செயற்கை மனிதர்களின் ஆளுகைக்குள் அகப்பட்டுக்கொள்ள வாய்ப்புண்டு.

தலைசிறந்த தலைவர்களையும் உருவாக்க, இவை தயாராகக் கூடும் என்பதற்குக் கட்டியம் கூறுகிறது, சோபியா என்கிற ரோபோ. ''மனிதர்களைவிடச் சிறந்த தலைவர்களாக ரோபோக்களால் இருக்க முடியும் என நான் முதலில் நினைத்தேன். ஆனால், மனிதர்களுடன் இணைந்துதான் எங்களால் சிறப்பாகப் பணியாற்ற முடியும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்'' என்று கூறுகிறது.

முதலில் இணைந்து செயலாற்றும் இவை காலப்போக்கில் தனித்திறம் பெற்ற தனியாளுமைகளாக வளர்ந்துகொள்ளவும் கூடும்.

அதே சமயத்தில், ஆன்மிக உபதேசம் செய்யும் அபரிமிதமான ஆற்றல் வாய்ந்த செயற்கை நுண்ணறிவு படைத்த மெய்ஞானிகளையும் இவ்வகையில் உற்பத்தி செய்யக்கூடும்.

மனித மன உயர்வெண்ணங்களும் வக்கிரங்களும் தரும் அழுத்தத்திற்கேற்பத்தான் இந்த எந்திர மனிதர்களின் சிந்தனையும் செயல்போக்கும் அமையும். ஏன், அவையே கூடத் தமக்குள் கூடித் தமக்கான உலகமாக இதனை ஆக்கவும் செய்யலாம். ஆனாலும், உண்மை அறிவு ஒருபோதும் தோற்பதில்லை. வெல்லவே செய்யும்.

***நுண்ணிய நூல்பல***
***கற்பினும் மற்றும்தன்***
***உண்மை அறிவே மிகும்***

என்கிறார் திருவள்ளுவர்.

என்னதான் நுண்ணிய அறிவுடன் இத்தகு கருவிமாந்தர்களை உருவாக்கினாலும், உண்மை அறிவின் ஆற்றலே உலகில் ஓங்கி நிலைக்கும் என்பது இயற்கை நியதி.

அன்பும் அறனும் இரு கரைகளாகக் கொண்டு முன்னகரும் உண்மை அறிவுடைய மானுடத்தால் இந்த உலகம் தழைக்கும். அந்த நிலைப்பாட்டுக்கு இத்தகு எந்திர மனிதர்களைப் படைத்துத் தரும் நல்ல உள்ளமுடைய வல்லுநர்கள் உருவாதல் வேண்டும்.

***(நன்றி - தினமணி)***

## நக்கல் நமசிவாயம்

***ஒரு காலத்தில ரணில் ஐயா அப்படி... மற்றுமொரு காலத்தில ரணில் ஐயா இப்படி... அப்படி இப்படி இருந்த காரணத்தினாலதான் ஒரு சீட்டில வந்து ஜனாதிபதியானவர் பாருங்கோ..!***



வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு மரணச்சான்றிதழ் நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்ள நாங்கள் தயாரில்லை

## வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா

மன்னார் நகர் நிருபர்

நாங்கள் ஒருபோதும் மரணச்சான்றிதழ் மற்றும் நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்ளத் தயாரில்லை. ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு, உறவுகளுக்கு என்ன நடந்தது?, நாங்கள் பணத்துக்காக இத்தனை வருடங்களும் வீதியில் நின்று போராடவில்லை - என மன்னார் மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று (13) வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் உள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளுடன் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலக அதிகாரிகள் (ஓ.எம்.பி.) மரணச் சான்றிதழ் மற்றும் நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறிப்பார்த்தனர். அந்த விடயம் சரிவரவில்லை. பின்னர் ஒவ்வொரு அம்மாக்களையும் அழைத்துப் பேசிப் பார்த்தனர். அதுவும் சரிவரவில்லை. ஆனால், தற்போது அரச திணைக்களங்களை அழைத்துப் பேசுகின்றனர்.



காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு மரணச் சான்றிதழ் மற்றும் நஷ்டஈடு வழங்கும் நடவடிக்கை ஒருபோதும் இடம்பெறாது. மரணச் சான்றிதழ் மற்றும் நஷ்ட ஈடு எங்களுக்குத் தேவையில்லை என்பதை ஓ.எம்.பி. அலுவலக அதிகாரிகளுக்கு நாங்கள் தொடர்ந்தும் கூறி வருகின்றோம்.

பாதிக்கப்பட்ட எங்களுடன் கதைத்துப் பார்த்தார்கள் சரி வரவில்லை. தற்போது திணைக்களங்களை அழைத்துப் பேசிப் பார்க்கின்றார்கள். அதுவும் சரி வராது. நாங்கள் ஒருபோதும் அவர்களின் கோரிக்கைகளுக்கோ வேண்டுகோள்களுக்கோ ஒத்துப்போக மாட்டோம்.

நாங்கள் நீதியையே கேட்டு நிற்கின்றோம். எமது பிள்ளைகளுக்கு, உறவுகளுக்கு என்ன நடந்தது?, நாங்கள் பணத்துக்காக இத்தனை வருடங்களாக வீதியில் நின்று போராடவில்லை.

அவ்வாறு காசுக்காகப் போராடும் அம்மாக்களும் நாங்கள் அல்ல. ஓ.எம்.பி. அலுவலக அதிகாரிகள் சகல விதத்திலும் எங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயன்றார்கள். பயனளிக்கவில்லை. இந்த நிலையில், திணைக்கள அதிகாரிகள் ஊடாக எங்களிடம் பேச முற்படுகின்றனர். நாங்கள் ஒருபோதும் மரணச்சான்றிதழ் மற்றும் நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்ளத் தயாரில்லை.

அரச திணைக்களத்தை வைத்து கதைக்கும் ஓ.எம்.பி. அலுவலகத்தினரே மீண்டும் எங்களுடன் கதையுங்கள் – என்றார்.

# அலரிவிதையை உட்கொண்ட இளம் தாய் உயிரிழப்பு

சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மறவன்புலோ பகுதியில் நேற்று முன்தினம் (12) புதன்கிழமை பிற்பகல் அலரி விதையை உட்கொண்டு இளம் தாயொருவர் உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக அலரி விதை உட்கொண்ட பெண்ணை உறவினர்கள் மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்தபோதிலும் அவர் வைத்தியசாலையில் சேர்த்த சில மணிநேரங்களில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# மனித உரிமைகள் டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்திசெய்த மாணவர்களுக்கு பட்டமளிப்பு









சாவகச்சேரி நிருபர்

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் மனித உரிமைகள் டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் நேற்று (13) வியாழக்கிழமை காலை யாழில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றிருந்தன.

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசனும், சிறப்பு விருந்தினராக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட ஆணையாளர் த.கனகராஜும், கௌரவ விருந்தினர்களாக மனித உரிமை செயற்பாட்டாளரும் ஆலோசகருமான ருக்கி பெர்னாண்டோ மற்றும் அருட்தந்தை றொனால்ட் சுஜீவன் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மேலும் வைத்தியர் தாரா, சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலைய உத்தியோகத்தர்கள், மனித உரிமைகள் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# அமரர் அமிர்தலிங்கத்தின் 34ஆவது நினைவு தினம் வலி. மேற்கில் அனுஷ்டிப்பு





யாழ். நிருபர்

மறைந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் 34ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று (13) வியாழக்கிழமை வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னால் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலையடியில் இடம்பெற்றது.

இதன்போது அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, சுடரேற்றி, மலரஞ்சலி செலுத்தி நினைவாஞ்சலி நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, புளொட்டின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கலேவத்தை தோட்டத் தொழிலாளர்களுக்கான போதைப்பொருள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

களுத்துறை நிருபர்

அண்மைக்காலமாக களுத்துறை மாவட்டத்தின் பெருந்தோட்டப் பகுதிகளில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை தொடர்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு அகலவத்தை பிரதேச செயலாளர் திருமதி சந்தரேக்கா வெல்கம தலைமையில் கலேவத்தை தோட்ட வளவில் செவ்வாய்க்கிழமை (11) காலை நடைபெற்றது.

களுத்துறை மாவட்டப் பெருந்தோட்டப்புறத் தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களிடையே நாளுக்குநாள் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகிறது. அதேவேளை, அவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டு வரும் போதைப்பொருள் விற்பனை போன்றவற்றில் இருந்து இளைஞர்களை மீட்டு நல்வழிப் படுத்தும் நோக்கில் “அழகிய குடும்பங்களைப் பாதுகாப்போம்” என்ற தொனிப்பொருளில் மேற்படி விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.





இக்கலந்துரையாடலில் டார்டன்பீல்ட் மற்றும் கலேவத்தை தோட்டத் தொழிலாளர்கள் பலர் கலந்துகொண்டதுடன் தோட்ட அதிகாரி பி.ஏ. லக்ஷ்மனின் ஆதரவுடன் மத்துகம பிராந்திய கலால் திணைக்கள அலுவலக அனுசரணையில் அகலவத்தை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெருந்தோட்டப்புற சமூகநல உத்தியோகஸ்தர் திருமதி சுரஞ்சி வீரசேகர இந்நிகழ்வை அனைவருக்கும் பயனுள்ள வகையில் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வர்த்தகரின் வீட்டுக்குள் நுழைந்து கொள்ளை; தலைமறைவான சந்தேக நபர் மடக்கிப்பிடிப்பு

எம்.எஸ். மஸாஹிம்

அலவாத்துகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்குரணை பகுதி வர்த்தகரொருவரின் வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த 78,32,800 ரூபா பெறுமதிமிக்க மூன்று தங்க பிஸ்கட்களையும், தங்கச்சங்கிலி மற்றும் 16 இலட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்று அநுராதபுர இப்பலோகம, கலாவெவ பகுதியில் தலைமறைவாக இருந்த சந்தேக நபரை அலவாத்துகொட பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

மேற்படி வீட்டு உரிமையாளர்கள் குடும்ப உறவினர் ஒருவரின் வீட்டுக்குச்சென்று திரும்பிய போது வீட்டினுள் இருந்த அலுமாரி திறக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி அலுமாரியை பரிசோதித்தபோது அங்கே பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பெறுமதி வாய்ந்த மூன்று தங்க பிஸ்கட்களும் நகைகள் உட்பட பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் வீட்டு உரிமையாளர் மூலம் அலவாத்துகொட பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின்போது சந்தேக நபர் மேற்படி கலாவெவ பகுதியில் கன்னம்மடுவ பிரதேசத்தில் வீடொன்றில் மறைந்திருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரைக் கைதுசெய்யும்போது வர்த்தகரின் இல்லத்தில் களவாடப்பட்ட தலா 100 கிராம் எடையுள்ள மூன்று தங்க பிஸ்கட்கள், 10.480 மில்லி கிராம் கொண்ட தங்கச்சங்கிலி என்பன சந்தேக நபர் பதுங்கியிருந்த வீட்டின் கட்டிலின் கால் பகுதியில் மறைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வர்த்தகரின் கொள்ளையிடப்பட்ட 14 இட்சம் ரூபா பணத்தில் 5 இலட்சம் ரூபாவுக்கு ஒரு ஓட்டோவைக் கொள்வனவு செய்வதற்காக கட்டுகஸ்தோட்டை பகுதி நபரொருவரிடம் கையளிக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. மேலும் கட்டுகஸ்தொட்ட மஹிய்யாவ பகுதியில் எட்டு இலட்சம் ரூபாவுக்கு கேரள கஞ்சாவைக் கொள்வனவு செய்ய போதைவஸ்து வர்த்தகரொருவரிடம் பணம் கையளிக்கப்பட்டதாக சந்தேக நபர் தெரிவித்ததையடுத்து மேற்படி போதைவஸ்து வர்த்தகரைக் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

சந்தேக நபர் பட்டுகொட பமுனுபொல பகுதியைச் சேர்ந்தவர் எனவும் குறித்த சந்தேக நபரை பரிசோதனை செய்தபோது இவரின் இரகசியப் பகுதிக்குள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 360 கிராம் கொண்ட போதைவஸ்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டதரணி லலித் பதிநாயக்க மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்த திஸாநாயக்க ஆகியோரின் விஷேட பணிப்பின் பேரில் கண்டி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமில் ரத்நாயக்க, உதவிப் பொலிஸ் அதிகாரி எச்.எம் குணவர்தண ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பில் அலவாத்துகொட பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுஜீவ குணரத்ன குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் உபாலி கருணாரத்ன ஆகியோர் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விசாரைணையை தொடர்ந்து சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார்.

# துருக்கி நாட்டு யுவதிக்கு பஸ்ஸுக்குள் பாலியல் தொல்லை

கண்டி நிருபர்

தம்புள்ள பிரதேசத்தில் பஸ்ஸுக்குள் பயணித்துக்கொண்டிருந்த துருக்கி நாட்டைச் சேர்ந்த யுவதியொருவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து இராணுவ கோப்ரல் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மாத்தளைப் பிரதேசத்தைச் சேர்ந்த இராணுவ கோப்ரல் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தம்புள்ள பொலிஸார் தெரிவித்தனர்.

துருக்கி நாட்டைச் சேர்ந்த மூன்று யுவதிகளும் பாகிஸ்தான் நாட்டு இளைஞர் ஒருவரும் கண்டியிலிருந்து தம்புள்ள நோக்கி பஸ்ஸில் பயணிக்கும் போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கெதிராக அமர்ந்து சென்ற சந்தேக நபர் நித்திரையில் இருந்த யுவதி மீது பாலியல் சேட்டைகளை மேற்கொண்டபோது ஏற்பட்ட தகறாறையடுத்து பஸ்ஸில் இருந்தவர்கள் சந்தேக நபரைப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட யுவதி துருக்கி நாட்டின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரின் மகள் என்றும் மற்றைய இருவரும் ஆசிரியைகள் எனவும் தெரிவிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

# பிரதி அதிபர் ஓய்வு



தலவாக்கலை நிருபர்

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திருமதி நிர்மலாதேவி சுகனேஸ்வரன் 33 வருட கல்விச் சேவையிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றார். அப்புத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தனது ஆரம்பக் கல்வியை அப்புத்தளை விட்டில்புலவர் கொன்வன்டிலும் இடைநிலைக்கல்வியை பண்டாரவளை சென்மேரிஸ் கல்லூரியிலும் உயர் கல்வியை பண்டாரவளை சென்.ஜோசப் கல்லூரியிலும் மேற்கொண்டிருந்தார். 1990 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையில் இணைந்துகொண்ட இவர், நுவரெலியா புனித சர்வேரியார் கல்லூரியில் தனது முதல் நியமனத்தைப் பெற்று அங்கு 2 வருடங்கள் கடமையாற்றி தேசிய கல்வி நிறுவகத்தின் தொலைக்கல்வி ஊடாக தனது ஆரம்பக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்து பல பாடசாலைகளிலும் ஆசிரியராகக் கடமையாற்றி பல போட்டிப் பரீட்சைகளிலும் சித்தியெய்து தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு பிரதி அதிபராக நியமனம் பெற்றார். தற்போது தனது 60 ஆவது வயதில் கடந்த வாரம் ஓய்வு பெற்றார். இவரை தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் கிருஸ்ணசாமி தலைமையில் ஆசிரியர் குழாம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் ஒன்றியம், உயர்தர மாணவர் குழாம் ஆகியன ஒன்றிணைந்து கௌரவித்தனர். இந்நிகழ்வில் அதிபர் கிருஸ்ணசாமி, பிரதி அதிபர் ஜெகதீசன்,கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

# ‘சுற்றாடலும் சுகவாழ்வும்’ சித்திரக் கண்காட்சி

கண்டி நிருபர்

சுற்றாடல் தொடர்பான சித்திரக் கண்காட்சி ஒன்று கண்டி ஆசிரிய வைத்தியசாலையில் இடம்பெற்றது.

மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம், இலங்கை வங்கி, மத்திய மாகாண விவசாய அமைச்சு உட்பட பல நிறுவனங்கள் இதற்கான அனுசரணையை வழங்கியிருந்தன.

இதில் கலந்து கொண்ட 100 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன. அவர்களில் 50 பேர் விசேட உதவி தேவைப்படுபவர்களாவர் எனக் கண்டறியப்பட்டுள்ளது..



மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, ஆசிரிய வைத்தியசாலை கூட்டு நிறுவனப் பணிப்பாளர் பிரசாத் மெதவத்த, விவசாய அமைச்சின் செயலாளர் டபிள்யூ. தயானந்த, கண்டி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சமரி அந்தரகே உட்படப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

# பதிவுசெய்யாத வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை நடத்தி வந்தவர் கைது!

ராமு தனராஜா

பதுளையில் பதிவுசெய்யப்படாத வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை நடத்தி வந்த நபரொருவரை கைதுசெய்வதற்காக அலுவலக அதிகாரிகள் சுற்றிவளைப்பு மேற்கொண்டபோது புதன்கிழமை மாலை அவர் கைதுசெய்யப்பட்டார் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஹாலி -எல அலுவலக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெளிநாட்டவர் ஒருவரிடமிருந்து அதிகாரிகளின் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையிலேயே இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட 55 வயதான சந்தேக நபர் மட்டக்களப்பு, கல்லடி சரவணா வீதியில் நிரந்தரமாக வசிப்பவரெனவும் கைலாகொட, பதுளை - மஹியங்கனை வீதியில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து தங்கியிருந்தார் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேக நபருடன் அந்த நிறுவனத்தில் காணப்பட்ட ஆவணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபரை பதுளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஹாலிஎல அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.





**1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற கறுப்பு ஜூலையின்போது மாத்தளை நகரில் இந்துக்களும் இந்துமத ஆலயங்களும் தாக்கப்பட்டதை நினைவுகூரும் 40 வருட பூர்த்தியையும் மாத்தளை நகரில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தக்கூறி கடந்த 12 ஆம் திகதி மாலை மணிக்கூட்டுக்கோபுர சந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது மாத்தளை மாவட்ட ஜே.வி.பி. அமைப்பாளர் கமகெதர திஸாநாயக்க உரையாற்றுவதையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (மாத்தளை நிருபர் )**





நுவரெலியா ரோட்டரி கழகத்தின் 58ஆவது தலைவராக யாதவசிவம் சவீஸ்கரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரின் பதவியேற்பு நிகழ்வு நுவரெலியா கிறேண்ட் சுற்றுலா விருந்தகத்தில் நடைபெற்றது. இக் கழகத்தின் 2023 /2024 ஆண்டுக்கான புதிய செயலாளராக பி.பாலசுப்பிரமணியம்,பொருளாளராக ஆர். சதீஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நுவரெலியா ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட உறுப்பினருமான வீ. ஆதிமூலம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ரோட்டரி மாவட்ட ஆளுநர் ஜெரோம் ராஜேந்திரம், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோட்டரியன் வேலுசாமி இராதாகிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர். **படப்பிடிப்பு:** *தலவாக்கலை நிருபர்*



# அரச வருவாய் தொடர்பான சவாலில் ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளோம்

## இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு

அரச வருவாய் தொடர்பான சவாலில் பல அனுபவங்களை எதிர்கொண்டு ஜனாதிபதியின் வழிகாட்டலின்படி குறிப்பிட்டளவு ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளோம். மேலும், மொத்த தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடும்போது நமது அரச வருவாயை அதிகரிப்பதற்கு இன்னும் பல இலக்குகளை அடைய வேண்டும் என நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அரச வருமானத்தை அதிகரிப்பதற்காக புதிய வருமான வழிகளை உருவாக்குவதற்கான மூலோபாயங்களைக் கண்டறிவதற்காக நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து 12ஆம் திகதி கையளிக்கப்பட்டது. அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், தற்போதுள்ள வருமான வழிகளை நெறிப் படுத்துவதற்கும் மக்களுக்கு சுமை ஏற்படாத வகையில் புதிய வருமான வழிகளை அறிமுகப்படுத்தி குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால முன்மொழிவுகளை உள்ளடக்கி ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அரச வருவாய் தொடர்பான சவாலில் பல அனுபவங்களை எதிர்கொண்டு தற்போது ஜனாதிபதியின் வழிகாட்டலின்படி குறிப்பிட்டளவு ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளோம். மேலும், மொத்த தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடும்போது நமது அரச வருவாயை அதிகரிப்பதற்கு இன்னும் பல இலக்குகளை அடைய வேண்டும்.

புதிய வரிகளை அறிமுகப்படுத்தல், வரி சதவீதத்தை உயர்த்துதல் ஆகியவற்றில் நாம் உச்ச வரம்பை எட்டியுள்ளோம். எனவே, வரி அடிப்படையை விரிவுபடுத்துவதிலும் அதிலுள்ள ஓட்டைகளைக் குறைப்பதிலும் நாம் இப்போது கவனம் செலுத்த வேண்டும். மேலும், போட்டித்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையின் மூலம் அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்கும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக அனைத்து தரப்பினருடனும் தொடர்ந்து கலந்துரையாடி வருகிறோம். நீண்டகாலமாக சர்ச்சைக்குள்ளான விடயங்களை நியாயமான மட்டத்துக்குக் கொண்டுவர இந்த கலந்துரையாடல்கள் உதவியது என்று தெரிவித்தார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, நிதி அமைச்சின் பதில் செயலாளர் ஆர்.எம்.பி.ரத்நாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பழைய மாணவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி

ஒபேசேகரபுர, ஸ்ரீ ஜயவர்தனபுர இந்து வித்தியாலய பழைய மாணவர்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (16) அதிபர் தங்கராசா பேரின்பராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் சந்திரா சில்வா மைதானத்தில் காலை 9.30 மணிமுதல் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

பழைய மாணவர்களை ஒன்றுதிரட்டும் பொருட்டும் அவர்களுக்கிடையே ஒற்றுமையை வலுப்படுத்தும் நோக்கிலும் இந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது. இந்தப் பாடசாலையில் கல்வி கற்ற அனைத்து பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# இராகலையில் தமிழ் மொழித்தினப் போட்டி








ஆ.ரமேஸ்

அகில இலங்கை தமிழ் மொழித்தினப் போட்டி வலப்பனை கல்வி வலயத்துக்குட்பட்ட இராகலை கிருஷ்ணன் மாதிரி பாடசாலையில் அதிபர் ஆர்.விஜயகுமார், கல்விப் பணிப்பாளர் காந்தரூபன் ஆகியோரின் இணைத்தலைமையில் புதன்கிழமை(12) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உப வலய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.







மொ/அலுப்பொத்த, மதீனா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா அதிபர் ஏ.யூ.எம் ரிசால் (நழீமி)தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மொனராகலை வலய கல்விப் பணிப்பாளர் ஹர்ஷனி ஷமீரா, பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார போன்றோர் அதிதிகளாக கலந்துகொண்டனர். இதன்போது பாடசாலை பழைய மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். **படப்பிடிப்பு:** எம்.ஏ.எம். ஹசனார்

# பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டம்

## LRC காணிகளை காணியற்றவர்களுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பிலும் ஆராய்வு

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டம் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக பிரிவில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப் பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டன.

அத்துடன் விசேடமாக களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவின் காணிகளை காணியற்ற மக்களுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பிலும் அதற்கான பொறிமுறையினை வகுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், குருக்கள்மடம் பகுதியை காத்தான்குடி பொலிஸாரும் பெரியகல்லாறு பகுதியை கல்முனை பொலிஸாரும் நிர்வாகம் மேற்கொள்வதாகவும் பிரதேச அடிப்படையில் குருக்கள் மடம், பெரிய கல்லாறு பகுதிகளை களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவினரே நிர்வகிக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

அத்துடன் பட்டிருப்பு தேசிய பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பாடசாலை நேரங்களில் குறித்த பாதையை ஒருவழிப் பாதையாக்குவது தொடர்பிலும் கல்லாறு வாவியில் கூடுகளில் மீன் வளர்ப்பினை மேற் கொள்பவர்களுக்கான அரச ஆவணங்களை முன்னுரிமைப்படுத்தி வழங்குவதற்கான தீர்மானங் களும் எட்டப்பட்டன.



இதன்போது பாராளு மன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கியன், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் பிரத்தியேக செயலாளர் த. தஜீவரன் மற்றும் திணைக்கள தலைவர்கள், துறைசார் உத்தியோகஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





யாழ். திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பிகையின் துவஜா ரோஹணம் கொடியேற்றத் திருவிழா நேற்று தேவஸ்தானத்தில் பக்தி பூர்வமாக நடைபெற்றது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

புதன்கிழமை 2023.07.12 — உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk — NLB

**மஹஜன சம்பத**

| சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|
| 5173 | ரூ. 21,282,344.00 |

ஆங்கில எழுத்து: N — வெற்றி இலக்கங்கள்: 0 9 4 2 3 9

**கொவிசெத** (Govisetha)

| சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|
| 3415 | ரூ. 69,031,723.20 |

ஆங்கில எழுத்து: A — வெற்றி இலக்கங்கள்: 07 10 22 59

**தன நிதானய**

| சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|
| 1203 | ரூ. 99,504,868.80 |

ஆங்கில எழுத்து: T — வெற்றி இலக்கங்கள்: 17 25 43 63 — விசேட எழுத்து: T

**ராசி சுப பலன்** (Handahana)

| சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு |
|---|---|
| 482 | ரூ. 3,213,132.60 |

வெற்றி இலக்கினம்: கன்னி — வெற்றி இலக்கங்கள்: 18 41 56 59 — விசேட இலக்கினம்: கன்னி

**Mega Power**

| சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த மெகா சுப்பர் பரிசு |
|---|---|
| 1521 | ரூ. 400,795,272.00 |

ஆங்கில எழுத்து: C — சுப்பர் இலக்கம்: 20 — வெற்றி இலக்கங்கள்: 18 36 41 79

அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (13.07.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 208.4391 | 220.9439 |
| கனேடியன் டொலர் | 232.2035 | 246.0010 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.2797 | 45.5025 |
| யூரோ | 341.9239 | 360.2418 |
| ஜப்பான் யென் | 2.2163 | 2.3343 |
| சிங்கப்பூர் டொலர் | 230.3171 | 243.3910 |
| ஸ்ரேலிங் பவுன் | 399.5335 | 420.0118 |
| சுவிஸ் பிரான்ங் | 353.2991 | 375.1130 |
| ஐ.அ. டொலர் | 308.1626 | 321.8765 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 834.5033 |
| குவைட் | குவைட் தினார் | 1,026.0499 |
| ஓமான் | ஓமான் றியால் | 816.1972 |
| கட்டார் | கட்டார் றியால் | 86.3135 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 83.8563 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 85.6508 |





மட்டக்களப்பு குருக்கள்மடம் அருள்மிகு ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேக இறுதிநாள் நிகழ்வான சங்காபிஷேகம் மற்றும் பாற்குட பவனி செவ்வாய்க்கிழமை(11) இடம்பெற்றன. **படங்கள்:** குருக்கள்மடம் செய்தியாளர்

# தமிழ் மக்களுக்கு எதிரான சூழல் மீண்டும் அமைவதற்கான சாத்தியம்

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

*கல்லடி செய்தியாளர்*

தற்பொழுது நாட்டிலே நடக்கும் விடயங்களைப் பார்த்தால் மீண்டும் ஒருமுறை தமிழருக்கு எதிரான சூழலொன்று அமைவதற்கான சாத்தியங்கள் தெரிவதாக மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்வூடகச் சந்திப்பு களுவாஞ்சிக்குடியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் புதன்கிழமை (12) இடம்பெற்றது.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், நாங்கள் மிக அவதானமாகச் செயற்பட வேண்டிய காலப்பகுதியாக இக்காலகட்டம் காணப்படுகிறது. இந்நிலையில் குறிப்பாக, அண்மையிலே பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வடக்கு, கிழக்கில் இருக்கும் தமிழ் நீதியரசர்களைப் பற்றிக் கூட குற்றம் சொல்லும் அளவுக்கு நிலைமை மோசமாகப் போய்க் கொண்டிருக்கின்றது.

குருந்தூர் மலையில் தன்னை பேசவிடவில்லை எனக் கூறி, ஒரு குற்றச்சாட்டுக்காக நீதியரசர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது சிங்கள நாடு. சிங்கள நாட்டிலே நாங்கள் தான் ஆட்சியாளர்கள் என்று சொல்லியிருந்தார். இவ்வாறான மனப்பாங்குகளின் காரணத்தினால் தான் நாடு இந்த வங்குரோத்து சூழ்நிலையை அடைந்திருக்கின்றது. நாங்களும் பல இடங்களில் இதுபற்றிப் பேசியிருக்கின்றோம். இதற்கான தீர்வைக் காணவேண்டும். ஜூலை 30க்கிடையிலே ஒரு முடிவை ஜனாதிபதி சொல்வதாகக் கூறியிருக்கின்றார். ஆனால், இதிலே ஒரு சாதகமான முடிவை சொல்லக்கூடிய சூழல் இருக்கும் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

ரணில் மிகவும் தந்திரமாக செயற்படக் கூடியவர். நரி என்று சொல்வார்கள். இவை அனைத்தும் தமிழ் மக்களினுடைய நிரந்தரமான அரசியல் தீர்வு என்பதற்கான தேவை இல்லை. இந்த நாட்டில் தமிழ் மக்கள் அரசியல் தீர்வை விரும்பவில்லை. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சி இல்லாவிட்டால் சாணக்கியன் போன்ற ஒரு சிலரின் தேவைக்காக இதைப் பேசுகின்றார்கள் என்று தெற்கிலும் சர்வதேசத்திலும் சொல்கின்ற அளவுக்கு நிலைமையை மாற்றுவதற்கு முயற்சி எடுக்கின்றார்கள்.

இதில் நாங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். முதலாவது எங்களுடைய மாவட்டத்தில் இருக்கும் வளங்களைச் சூறையாடி அவற்றை அழித்து தங்களுடைய அரசியலில் எதிர்வரும் காலங்களில்



செய்வதற்காக பணம் உழைத்துக் கொண்டு, மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்ற தமிழ் பிரதிநிதிகளுடனும் கவனமாக இருக்க வேண்டும்.

அதேபோன்றுதான் தாங்களும் தமிழ் தேசியவாதிகள் எனக் காட்டிக்கொண்டு நான் கூறியது போன்று பத்தாயிரம் மீற்றர் கரும்பு செய்ததற்காக தங்களுடைய தொடர்புகளைப் பயன்படுத்தி அரசுக்கு எதிர்ப்பு எனக் காண்பித்து இவ்வாறாக தனியாரிடமிருந்து இலாபம் பெறுபவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

அதேபோல, சரத் வீரசேகர, நாமல் ராஜபக்ஷ போன்ற இனவாதத்தை மீண்டும் இந்த நாட்டுக்குள்ளே கொண்டு வந்து தங்களுடைய அரசியல் இலாபத்தை தேடுபவர்களிடமும் கவனமாக இருக்க வேண்டும். அதேபோல, இவர்கள் அனைவரையும் வைத்துக்கொண்டு இயக்கி தமிழ் மக்களுக்குத் தீர்வு தேவை இல்லை என்று சொல்ல முயற்சி எடுக்கும் ரணில் விக்கிரமசிங்கவிடமும் நாங்கள் கவனமாக இருக்க வேண்டும் - என்றார்.

# டொக்டர் பாரிஸ் அகமட் பிரித்தானியா பயணம்



நிந்தவூரைச் சேர்ந்த டொக்டர் முஹம்மட் சரிப் பாரிஸ் அகமட் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மருத்துவ நிபுணர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சிக்காக ஐக்கிய இராச்சியத்துக்கு இம்மாதம் பயணமாகின்றார்.

இப்பயிற்சியின் பின்னர் நமது பிராந்தியத்தில் முதலாவது நிபுணராக இத்துறையில் வெளியாகவுள்ளதுடன் இத்துறையில் இலங்கையின் முதலாவது நிபுணத்துவர்கள் குழாமைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் தனது ஆரம்பக் கல்வியை நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையில் கற்றதுடன் மருத்துவத்துறையை களனி பல்கலைக்கழகத்தில் கற்று 2001 இல் பட்டம் பெற்றார்.

இவர் ஓய்வுபெற்ற ஆசிரியர்களான எஸ்.எம்.சரிப் மற்றும் ஜுனைதா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற முன்னாள் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் கே.முகமட் தம்பியின் மருமகனும் ஆவார்.



**மட்டக்களப்பு - மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அரச காணிகளில் காணப்படும் தீர்க்கப்படாத காணிப் பிணக்குகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் காணி தொடர்பான நடமாடும் சேவை வியாழக்கிழமை(13) இடம்பெற்றது. இந் நடமாடும் சேவையானது மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணக் காணி ஆணையாளர் டி.எம்.ஆர்.சி.தசநாயக்கவின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.**

**படம்:** மட்டக்களப்பு

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



**சாய்ந்தமருது மல்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலய பாடசாலையின் நூலகத்துக்கு பெறுமதி வாய்ந்த ஒருதொகை புத்தகத்தை புதன்கிழமை(12) சைனிங் ஸ்டார் பெண்கள் அமைப்பின் ஊடாக அன்பளிப்பு செய்யப்பட்டது. இதனை பாடசாலை அதிபர் திருமதி நஸ்லின் ரிப்கா அன்சாரிடம் கையளிப்பு செய்த சந்தர்ப்பத்தில் சைனிங் ஸ்டார் அமைப்பின் பிரதான அங்கத்தவர்கள் திருமதி பஸீரா ரியாஸ் (பெஸ்டர் ரியாஸ்) மற்றும் ஆயிஷா நியாஸ் ஆகியோர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர். இந்நிகழ்வில் பாடசாலையின் நூலகத்துக்கு பொறுப்பான ஆசிரியைகள், பகுதித் தலைவர்கள் மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர்.**

**படம்:** பாறுக் ஷிஹான்

# தளபாடங்கள் வழங்கிவைப்பு



*கல்முனை செய்தியாளர்*

கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற 96ஆம் ஆண்டு பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து மேசைகள் மற்றும் கதிரைகள் என்பனவற்றை அன்பளிப்பாக வழங்கி வைத்தனர்.

கல்முனை அல்-மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் கல்விகற்ற பழைய மாணவர்களை பாடசாலையோடு மீண்டும் ஒன்றிணைக்கும் முகமாக மறைந்த பாடசாலை ஆசிரியர்களான மர்ஹூம் ஏ.ஹபீப் முஹம்மட், எம்.எஸ்.எம்.ஷர்மில் ஆகியோரின் ஞாபகார்த்தமாக இடம்பெற்ற மாபெரும் கிரிக்கெட் மற்றும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் அங்குரார்ப்பண நிகழ்வின்போது ஒரு தொகுதி மேசைகள் மற்றும் கதிரைகள் என்பனவற்றை பாடசாலை அதிபர் அப்துல் ரசாக்கிடம் அன்பளிப்பு செய்தனர்.

இதன்போது பிரதி அதிபர் ஐ.எல்.எம்.ஜின்னா உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.



**அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு மையவாடி தேவைகள் குறித்து சமூக சேவையாளர் ஏ.சீ.நியாஸ் பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.சாபீரிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பதைக் காணலாம்.**

**படம்:** கோணாவத்தை செய்தியாளர்

# உகந்தை மலை ஆடிவேல் உற்சவம் 18ஆம் திகதி

*திருக்கோவில் மேலதிக செய்தியாளர்*

அருள்மிகு உகந்தை மலை முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் மஹோற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்தும் 15 நாட்கள் பூசைகள் இடம்பெற்று ஓகஸ்ட் 02 புதன்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து வியாழக்கிழமை(03) வைரவர் பூசையுடன் மஹோற்சவம் இனிதே நிறைவு பெறும்.

அத்துடன், உகந்தை மலை முருகன் ஆலயத்துக்கு பாதயாத்திரை செல்லும் ஏற்பாடுகளும் கிழக்கில் இடம்பெற்று வருகின்றன. இலங்கையில் காணப்படும் பழம்பெரும் வரலாற்றுச்



சிறப்புமிக்க தலங்களில் இதுவும் ஒன்றாகும். முருகக் கடவுளின் சூரசம்ஹார வரலாற்றுடன் மிக நெருங்கிய தொடர்புடைய திருத்தலமாக உகந்தை விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திக்கோடையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத மத்திய மருந்தகம் திறந்துவைப்பு

*சீலாமுனை செய்தியாளர்*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ், மாகாண விசேட செயற்பாடுகளுக்காக குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடையில் (PSDG) ரூபா 13 மில்லியன் செலவில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மேற்பார்வையோடு மட்டக்களப்பு - திக்கோடை பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்துவைத்தார்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் தலைமையில் புதன்கிழமை(12) இடம்பெற்ற இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கனகமுத்து கிருஷ்ணபிள்ளை, வெல்லாவெளி பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி, புதுக்குடியிருப்பு தள ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் திருமதி ஜே.பாஸ்கரன், நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.ஏ.நபீல், மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவு வைத்தியர் எஸ்.சதீஸ் உள்ளிட்ட அரச உயரதிகாரிகள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



# நடமாடும் சமூக சேவையும் விசேட மருத்துவ முகாமும்



*அட்டாளைச்சேனை செய்தியாளர்*

மக்களுக்கு சிறந்த சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைவாக, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டலின் கீழ் கிழக்கு மாகாணத்தில் உள்ள பின்தங்கிய பிரதேசங்களில் நடமாடும் சமூக சேவைகளும் விசேட மருத்துவ முகாம்களும் இடம்பெற்று வருகின்றன.

பொத்துவில் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வின்போது சுகாதாரத் துறையினர், சமூக சேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என துறைசார் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது சுகாதார விழிப்புணர்வு நிகழ்வு, வெளிநோயாளர் மருத்துவ சேவை,



இரத்தப் பரிசோதனை, விசேட பல் மருத்துவ சேவை, தொற்றா நோய் தொடர்பிலான மருத்துவ ஆலோசனைச் சேவைகள், விசேட தேவையுடையோருக்கான உதவிக் கொடுப்பனவு மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளல் போன்ற பல்வேறு சேவைகள் இடம்பெற்றன.

இதன்போது நூற்றுக்கணக்கான பயனாளிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

# 74ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் இருவர் கைது



*காத்தான்குடி மேலதிக செய்தியாளர்*

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி சிகரம் பகுதியில் 74ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்புடன் வியாழக்கிழமை(13) இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலையப் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி எச்.எம்.சியாம் தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் விற்பனைக்காக மறைத்து வைத்திருந்த சட்டவிரோத கசிப்பு கொள்கலன்களை பொலிஸார் மீட்டுள்ளதுடன் சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரிடமிருந்து 70ஆயிரம் மில்லி லீற்றர், மற்றொருவரிடமிருந்து 4ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது. கைதானவர்கள் ஆரையம்பதியைச் சேர்ந்த 30, 31 வயதைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர். காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## போடியார் புலம்பல்!



*இந்திய மீனவர் விடயத்தில உரிய முடிவுகள் எட்டப்படவேண்டும் என குத்துவிளக்கு கூட்டணி பேச்சாளர் சுரேஷ் பொடியன் சொன்னவர் எலுவா? எங்கடா குத்துவிளக்கு ஊடகப்பேச்சாளராக பதவி எடுத்த சுரேஷ்பொடியண்ட சத்தத்த காணல்ல எண்டு பார்த்தன் இந்திய மீனவர்தான் வாயில பட்டிருக்கு. இத டக்லஷ் மாமா பாப்பாரு அத உட்டுத்து ரெலோகாறனுகள் சீனாவோட ரகசியமா உறவு கொண்டாடிச்செய்த வவுனியா சீனித்தொழிற்சாலைக்கு உங்கட ஈபிஆர்எல்எவ் நிலைப்பாட்டயும் ஒருக்கா சொல்லுடாம்பி பாப்பம்!*

# நிரந்தர நியமனம் கோரி டெங்கு ஒழிப்பு கள உதவியாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு



*களுதாவளை செய்தியாளர்*

மட்டக்களப்பு மாவட்ட டெங்கு ஒழிப்பு கள உதவியாளர்கள் தமக்கான நிரந்தர நியமனம் கோரி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதுடன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில், செங்கலடி டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் வியாழக்கிழமை (13) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது 38 கள நுளம்பு உதவியாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

07 வருடங்களாக தற்காலிக நியமனம்பெற்று நாளாந்தம் 700ரூபா சம்பளத்தில் பணிபுரிவதாகவும் தமக்கான நிரந்தர நியமனம் கோரியுமே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, தமக்கான நிரந்தர நியமனம் வழங்கும்வரை பணிப்பகிஷ்கரிப்பிலும் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கும் இவர்கள், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் முன் ஒன்றிணைந்த இவர்கள் சுமார் ஒரு மணி நேரம் கையில் பதாதைகளை ஏந்தியவாறு, நிரந்தர நியமனம் கோரி கோஷமிட்டு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

# தொலைபேசி உள்ளிட்டவற்றை திருடிய இருவர் விளக்கமறியலில்

*கனகராசா சரவணன்*

பொத்துவில் அறுகம்பை கடலில் கடல் சறுக்கல் விளையாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஜேர்மனி வீரர் ஒருவரின் அப்பிள் ரக கையடக்கத் தொலைபேசி மற்றும் பணத்தைத் திருடிய சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட அட்டாளைச்சேனை பாலமுனையைச் சேர்ந்த இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அறுகம்பை கடலில் கடல் சறுக்கல் பயிற்சியில் ஈடுபடுவதற்காக கடற்கரையில் சம்பவதினமான கடந்த 8ஆம் திகதி சென்றிருந்த ஜேர்மனிய நாட்டு வீரர் ஒருவர் அங்கு தனது 02 இலட்சம் ரூபா பெறுமதியான அப்பிள் ரக கையடக்கத் தொலைபேசி மற்றும் கைப்பையை வைத்துவிட்டு கடலில் சறுக்கலுக்காக சென்று கரைக்குத் திரும்பிய போது அவரது கையடக்கத் தொலைபேசி மற்றும் கைபேசியில் இருந்த ஆயிரத்து நூறு ரூபா பணம் திருட்டுப் போயுள்ளது.

இதனையடுத்து பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்ஸ்டர் கே.எல்.ஹாரூன் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இதன்போது கூகுள் வலையமைப்பின் ஊடாக குறித்த வீரர் திருட்டுப் போன கையடக்கத் தொலைபேசி உள்ள இடம் தொடர்பாக தேடிக் கண்டுபிடித்து இடத்தைத் தெரிவித்தையடுத்து பொலிஸார் செவ்வாய்க்கிழமை (11) இரவு கைது செய்ததுடன் திருடப்பட்ட கையடக்கத் தொலைபேசி மற்றும் பணத்தையும் மீட்டனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்களை புதன்கிழமை பொத்துவில் நீதவான் நீதிமன்ற நீதவான் ஜ.என்.றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தியபோது இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையில், இருவரது கைவிரல் அடையாளங்களைப் பெறுமாறும் எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

# கந்தளாயில் அதிகரித்து வரும் திருட்டு: கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

*கந்தளாய் செய்தியாளர்*

**திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் திருடர்களின் அட்டகாசம் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

**கந்தளாய் பகுதியில் திருடர்கள் இரவு வேளையில் தமது கைவரிசையை காட்டி வருவதாக தெரிவிக்கும் மக்கள், அண்மையில் திருட வந்த இரு திருடர்கள் சிசிடிவி கெமராவை கண்டதும் தலைதெறிக்க ஓடியுள்ளனர்.**

**போதைக்கு அடிமையானவர்கள்தான் இச்செயலில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கும் இவர்கள், இப்படியாக கந்தளாய் பகுதியின் பேராறு, ரஜஎல, மத்ரஸா நகர் மற்றும் மூன்றாம் கொலனி போன்ற கிராமங்களில் இரண்டு மூன்று வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றதாகவும் தெரிவிக்கின்றனர்.**

**இதனால் மக்கள் இரவில் தூக்கமின்றி தவித்து வருகிறார்கள். தனித்துக் குடியிருக்கும் வீடுகளிலும் ஆட்கள் குடியிருக்கும் வீடுகளிலும் துணிந்து திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவது சாதாரணமாகி விட்டதாகத் தெரிவிக்கும் அவர்கள், திருட்டுச் சம்பவங்கள் விடயத்தில் கந்தளாய் பொலிஸார் கவனஞ்செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.**

# அம்பாறையில் சிவப்பு இன நெல்வகை பாதிப்பு: நஷ்டஈடு வழங்குமாறு விவசாயிகள் கோரிக்கை

*அக்கரைப்பற்று செய்தியாளர்*

அம்பாறை மாவட்டத்தில் வேளாண்மை அறுவடை ஆரம்பித்திருக்கும் வேளையில் சிவப்பு இன வேளாண்மைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதனால் அறுவடை செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உடன் நஷ்ட ஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலும் சிவப்பு இன நெற்கதிர்கள் காய் சாயாமலும் அரிசி இல்லாமலும் பதர் நிலையில் ஒரு வகை கறுப்பு நிறமாக மாறியுள்ளதனால் அவற்றை அறுவடை செய்வதில் எவ்வித பிரயோசனமும் இல்லை என்பதுடன், முற்றாகக் கைவிடும் நிலையே ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாய நிலத்துக்காக மிகக் கூடுதலான கூலி மற்றும் கூடுதலான இதர செலவுகளை மேற்கொண்டு வேளாண்மை செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இவ்வாறான தாக்கம் ஏற்பட்டுள்ளதனால், செலவு செய்த பணத்தைக் கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர்.

அத்தோடு அறுவடை செய்த நெல்லை மிகக் குறைந்த விலையில் தனியார் ஆலை உரிமையாளர்கள் கொள்வனவு செய்வதாலும் விவசாயிகளின் நிலை மிகவும் மோசடைந்துள்ளது.

எனவே, அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உடன் நஷ்ட ஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் மற்றும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

# அரச நிறுவனங்களை நிரந்தரமான இடங்களுக்கு மாற்ற குழு அமைப்பு

## சாய்ந்தமருது ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம்

*பாறுக் ஷிஹான்*

தற்காலிகமான கட்டடங்களில் இயங்கி வருகின்ற சாய்ந்தமருது பொலிஸ் நிலையம் உட்பட பல அரச நிறுவனங்களை நிரந்தரமான இடங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கான பொருத்தமான இடங்கள் மற்றும் கட்டடங்களை இனங்காண்பதற்கு குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையானது சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் நெறிப்படுத்தலில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் புதன்கிழமை(12) இடம்பெற்றவேளை இக்குழு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்குழுவானது சாய்ந்தமருது பொலிஸ் நிலையம் உட்பட அரச நிறுவனங்கள் நிரந்தரமாக அமைக்கப்பட வேண்டிய இடங்களை ஆராயவுள்ளது.

சாய்ந்தமருது பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேசத்தின் முக்கிய பிரச்சினைகள் மற்றும் கடந்தகால மற்றும் நிகழ்கால அபிவிருத்தித்திட்டங்கள், புதிய மையவாடி நிர்மாணித்தல், சாய்ந்தமருது பொலிஸ் நிலையம் உட்பட அரச நிறுவனங்கள் நிரந்தர கட்டடங்களுக்கு மாற்றுதல் உட்பட சமகால அபிவிருத்தி செயல்முறை தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, பிரதேச செயலகத் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, கணக்காளர் நுஸ்ரத் பானு, சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் ஏ.ஹிபதுல் கரீம், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்கள், திணைக்களங்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

மேலும் தற்போது சாய்ந்தமருது பொலிஸ் நிலையம் இயங்கி வருகின்ற இடம் கடந்த காலங்களில் போதைப்பொருள் பாவனையாளர்களினால் பயன்படுத்தப்பட்டு வந்திருந்த நிலையில், பல தரப்பினரின் வேண்டுகோளுக்கமைய, துப்புரவு செய்யப்பட்டு புதிய பொலிஸ் நிலையமாக 2021.11.29 அன்று திறந்து வைக்கப்பட்டிருந்தது. இதனால் இப்பகுதியில் உள்ள கடற்கரை பிரதேசத்தில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாவனைகள் குறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஹெரோயினுடன் ஒருவர் கைது

*அப்துல்சலாம் யாசீம்*

திருகோணமலை - ஐந்தாம் கட்டைப் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபரொருவரை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் திருகோணமலைப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

திருகோணமலை பிராந்திய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து புதன்கிழமை(12) குறித்த சந்தேக நபரை கைதுசெய்ததாகவும் தெரிய வருகின்றது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் அம்பாந்தோட்டை- உதாகம்மான பகுதியில் வசித்து வரும் அந்தோணி பதுகே திலின பிரசாத் (34வயது) எனவும் தெரிய வருகின்றது. குறித்த சந்தேக நபரை சோதனையிட்டபோது அவரிடமிருந்து 50 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபர் கடந்த இரண்டு வருடங்களாக அம்பாந்தோட்டையிலிருந்து திருகோணமலைக்கு ஹெரோயின் போதைப்பொருளைக் கொண்டு செல்வதாக குறித்த சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட நபரை உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் புலன் விசாரணையின் பின்னர் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# புதையல் தோண்டிய இருவர் கைது

*திருமலை செய்தியாளர்*

புதையல் தோண்டிய சந்தேகத்தின் பேரில் திருகோணமலை-தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சந்தேக நபர்கள் இருவரைக் கைதுசெய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் புதன்கிழமை (12) மாலை இடம்பெற்றுள்ளது.

தம்பலகாமம் 96ஆம் கட்டை பகுதியிலுள்ள வீட்டில் கிணறு தோண்டுவதைப் போன்று நாடகமாடி புதையல் தோண்டிக் கொண்டிருந்தவேளை இரு சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளனர்.

அரச புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைவாக கந்தளாய் பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது கல் துளைக்கும் இயந்திரத்துடன் இருவரைக் கைதுசெய்துள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் முள்ளிப்பொத்தானை சாலியபுர பகுதியைச் சேர்ந்த 55 மற்றும் 60 வயதுடையவர்கள் எனவும் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கல் துளைக்கும் இயந்திரம் மற்றும் மேலும் சில ஆயுதப் பொருட்கள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.குறித்த சந்தேக நபர்களை கந்தளாய் நீதிமன்றில் வியாழக்கிழமை(13) ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# அக்கரைப்பற்று கலாநிதிகளின் முன்னோடி மர்ஹூம் சலீம்



ஐக்கிய நாடுகள் சபையின் கால்நடைகள் அபிவிருத்தி மற்றும் உணவு உற்பத்தித் திட்டங்களின் விவசாய விஞ்ஞானியாக (Agronomist) பணிபுரிந்து ஓய்வு நிலையிலிருந்து கலாநிதி மர்ஹூம் எம்.ஏ.எம்.சலீம் அண்மையில் அவரது கொழும்பு இல்லத்தில் காலஞ்சென்றமை நம்மில் பலருக்கு பிந்திய செய்தியாகவே கிடைத்திருக்கின்றது.

அக்கரைப்பற்று 5ஆம் பிரிவு மன்பஉல் கைறாத் அறபுக் கல்லூரி வீதியில் காடியர் என்று அறியப்பட்ட முஹம்மது அலியாருக்கும் சாலிஹத்தும்மாவுக்கும் ஏக புத்திரராக 1942இல் பிறந்தார். மர்ஹூமாக்களான முஹம்மதும்மா முகம்மது இஸ்மாயில், முஹம்மது சபீயா அப்துல் மஜீத், முஹம்மது சல்மா செய்யத் மீரா (அதிபர்), முகம்மது சஹீதா அசனார் லெவ்வை (அதிபர்) ஆகியோர் அவரது சகோதரிகளாவர். க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் மிகத்திறமைச் சித்திகளைப் பெற்ற இவர், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத்துறையில் இளமாணிப்பட்டத்தைப் பெற்றார். பின்னர் பொதுநலவாய நாடுகளின் புலமைப்பரிசில் பெற்று நைஜீரிய நாட்டின் முன்னணி கல்வி நிறுவனங்களில் ஒன்றான இபடான் பல்கலைக்கழகத்தில் தனது முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

கலாநிதிப் பட்டப்படிப்பு முடியும் தறுவாயில் இருக்கும்போதே 1978ஆம் ஆண்டில் நைஜீரியாவின் கடுனா நகரில் அமையப்பெற்ற ஆபிரிக்காவுக்கான சர்வதேச கால்நடை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் விவசாய விஞ்ஞானியாக நியமிக்கப்பட்டார். உலக வங்கி மற்றும் நைஜீரிய அரசு ஆகியவற்றின் அனுசரணையிலும் மேற்பார்வையிலும் இம்மையம் நிர்வகிக்கப்பட்டது. மர்ஹூம் கலாநிதி சலீம், கடுனாவில் கால்நடை விவசாய அபிவிருத்தித்துறையில் மேற்கொண்ட பணிகள் குறுகிய காலப்பகுதியில் உலக வங்கியையும் நைஜீரிய அரசையும் வெகுவாக ஈர்த்துக் கொண்டன. அதனால் ஆபிரிக்காவுக்கான சர்வதேச கால்நடை அபிவிருத்தி மையத்தின் தலைமையகத்துக்கு பிரதம விஞ்ஞானியாக பதவி உயர்வு வழங்கப்பட்டு அனுப்பப்பட்டார்.

எத்தியோப்பியாவின் தலைநகர் அடிசபாபாவில் அமையப் பெற்ற இத்தலைமை ஆராய்ச்சி நிலையத்தில் அனைத்து தீவன ஆராய்ச்சிக்கும் தலைமை தாங்கி அதனை வழிநடத்தினார். அதன் பின்னர் கிழக்கு ஆபிரிக்கா, மத்திய ஆசியாவில் உள்ள கூட்டாளர்களுடன் இணைந்து மலை வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் குழுவுக்குத் தலைமை தாங்கினார். நீண்ட காலமாக ஆபிரிக்காவில் கால்நடை மேய்ப்பாளர்களுக்கும் விவசாயிகளுக்குமிடையில் புரையோடிப் போய்க் காணப்பட்ட பிரச்சினை இவரின் ஆராய்ச்சியின் பயனாக முடிவுக்கு வந்தமை இவருக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

நிலம், உழைப்பு, மூலதனம் என்பன குன்றிக் காணப்பட்ட இந்தப் பாரம்பரிய மேய்ப்பாளர்களுக்கு தீவனங்களைத் தேடிக் கண்டுகொள்ளும் முயற்சியில் ஈடுபட்ட அவர் அதில் வெற்றியும் கண்டார். இவரது அயராத ஆராய்ச்சியின் பயனாக வெப்ப மண்டல புதிய தீவனப் பயிர் ஒன்றை ஆபிரிக்காவுக்கு அறிமுகம்செய்து வைத்தார்.

Stylo Santhas hamate - ஸ்டைலோ – சாந்தஸ் ஹமட்டா எனும் இந்தப் பயிர் வரண்ட கால நிலையிலும் பசுமையாக இருந்து மண்ணில் பெறப்படும் நைட்ரஜனை சரி செய்து மண்ணுக்குத் தேவையான ஊட்டச்சத்தை வழங்கக் கூடியதாகும். தாம் பணி செய்த காலப்பகுதியில் மிகத் தீவிர அர்ப்பணிப்புடன் கடமை புரிந்ததனால் ஆபிரிக்காவில் நீரும் உணவுமின்றி மரணிக்கவிருந்த பல மில்லியன் கணக்கான கண்கவர் விலங்குகளுக்கான தீவனத்தின் தரத்தை மேம்படுத்தி அவை காப்பாற்றப்படுவதற்கு காலாக அமைந்திருந்தார்.

இவர் கால்நடைகளின் தீவனப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுப்பதில் பெரும் பங்காற்றியவர் என்பதனால் ஆபிரிக்காவில் விவசாய ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் "கால்நடை உணவு வங்கியின் பிதா" என்று சிறப்பாக அழைக்கப்படலானார். இவர் தான் பிறந்தகமான அக்கரைப்பற்றில் மட்டுமல்லாது, தனது புகுந்தகமான சாய்ந்தமருதிலும் இலைமறைகாயாகவே காணப்பட்டுள்ளார்.

மரியாதை, கருணை, பணிவு, பரோபகாரம், சமூக சிந்தனை என்பன இவரிடம் காணப்பட்ட விசேட குணங்களாகும். அக்கரைப்பற்றில் உறவினர்கள், நண்பர்கள், தேவையுடையோர், சமூக நிறுவனங்கள் எனப் பலருக்கும் இவர் நேசக்கரம் நீட்டியே வாழ்ந்திருக்கின்றார். இவைபற்றி சிலர் அறிந்திருப்பினும் பலர் அறியாதுள்ளனர். அக்கரைப்பற்று "மன்பஉல் ஹைறாத்" அறபுக்கல்லூரியில் 1990ஆம் ஆண்டு வெள்ளிவிழா, பட்டமளிப்பு விழா, கட்டிடத்திறப்பு விழா என முப்பெரும் விழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. இதனை முன்னிட்டு கல்லூரியினால் வெளியிடப்பட்ட சிறப்பு மலரில் கல்லூரியின் ஆளுநர் சபையின் அப்போதைய செயலாளர் ஓய்வு பெற்ற அதிபர் ஏ.எம்.யூசுப், தனது தசாப்தகால அறிக்கையில் மர்ஹூம் கலாநிதி சலீம் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். எமது தாயகம் ஈன்றெடுத்த முதற் கலாநிதி எம்.ஏ.முஹம்மத் சலீமால் கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பணத்தைக் கொண்டு களவெட்டியா வட்டையில் (11 A கொலனியில்) 03 ஏக்கர் வயல் காணி வாங்கப்பட்டு கல்லூரிக்கு வொக்புச் செய்யப்பட்டது. மேலும் அவர் கல்லூரிக்கு விஜயம் செய்த போது ஆளுநர் சபைத்தலைவர் அல்ஹாஜ் மௌலவி எஸ்.எல்.எம்.ஹனீபா மதனியின் வேண்டுகோளின் பேரில் கல்லூரியில் கற்பிக்கும் விரிவுரையாளர்களின் ஒரு வருடத்துக்கான சம்பளத்தையும் தந்துதவினார்.

அன்னாரின் உதவிகளை மன நிறைவோடு நினைவு கூருகின்றேன். மர்ஹூம் ஏ.ஆர்.எம்.சலீம் அதிபரால் எழுதப்பட்ட 'அக்கரைப்பற்றின் வரலாறு' என்ற நூலின் 202ஆம் பக்கத்திலும் மர்ஹூம் கலாநிதி சலீமின் பங்களிப்புகள் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம். அக்கரைப்பற்றின் மாணவர் சமூகமும் இளைய தலைமுறையினரும் அறிவு சார்ந்தோரும் சமூகப்பணியாளர்களும் இவர்பற்றித் தெரிந்து கொள்வது நமக்கும் சமூகத்துக்கும் பெரிதும் பயனளிக்கும் எனும் நோக்கிலும் "உங்களிலிருந்து மரணித்தவர்களின் நல்ல விடயங்களைப் பிரஸ்தாபியுங்கள்" என்ற நபிமொழியைப் பின்பற்றியும் இது எழுதப்பட்டிருக்கின்றது.

கலாநிதி மர்ஹூம் சலீமின் மனைவி பத்தூல் ஹுசைன் அவர்தம் அன்புப் பிள்ளைகள் ஹுஸ்னா, அம்ஜத் மற்றும் இரத்த உறவினர்கள் சொந்தபந்தத்தினர் அனைவரும் இவரின் பிரிவால் மனமுடைந்தும் சோர்வடைந்தும் இருப்பார்கள். இவர்கள் அனைவருக்கும் பொறுமையையும் சகிப்புத்தன்மையையும் வழங்க வேண்டுமென வல்ல நாயன் அல்லாஹ்வை வேண்டுவதுடன், அவரின் பிரிவால் ஏற்பட்டுள்ள இழப்புகளை அவனது அருளாலும் கடாட்சத்தாலும் நிவர்த்திசெய்ய வேண்டுமென இருகரம் ஏந்திப் பிரார்த்திக்கிறேன். "நிழலே அற்ற கியாமத்து நாளில் அல்லாஹ் தனது பிரத்தியேகமான நிழலை சிலருக்கு வழங்குவதாக வாக்குறுதியளித்துள்ளான். அச்சிலருள் இறைபணிக்காக தங்களுக்குள் நட்பாயிருந்தவர்களும் ஒரு சாராராவர்" என்பது எமது முஹம்மது நபி (ஸல்) அவர்களின் கூற்றாகும்.

அந்தவகையில் கலாநிதி மர்ஹூம் சலீமுக்கும் அவரோடு சேர்ந்து பணிசெய்தோருக்கும் எமக்கும் கருணைமிகு அல்லாஹ் அவனது பிரத்தியேக நிழலை வழங்கி கௌரவிக்க வேண்டுமென இறைஞ்சுகிறேன்.

***அஷ்ஷெய்க் எஸ்.எல்.எம்.ஹனீபா மதனி – LLB (Hons) UK***
***முன்னாள் ஆளுநர் சபைத்தலைவர், மன்பஉல் கைறாத் அறபுக்கல்லூரி, அக்கரைப்பற்று***

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk thamilaneditor@gmail.com

# புதிய சுற்றுச்சூழல் நடவடிக்கையை மேற்கொள்வதாக அறிவிக்கும் Samsung Electronics




amsung Electronics அண்மையில் தனது புதிய சுற்றுச்சூழல் செயற்பாடு குறித்து அறிவித்துள்ளது. இது காலநிலை மாற்றத்தைச் சமாளிப்பதற்கான உலகளாவிய முயற்சிகளுடன் இணைவதற்கான ஒரு விரிவான முயற்சியாகும். நிறுவன அளவிலான நிகர பூஜ்ஜிய கார்பன் வெளியேற்றத்தை மேற்கொள்வதற்கான உறுதிப்பாடுகள் மற்றும் அதிக புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துவதற்கான திட்டங்கள். அத்துடன், ஆற்றல் திறன் கொண்ட தயாரிப்புகளை உருவாக்க புதிய தொழில்நுட்பங்களில் முதலீடு செய்து ஆராய்ச்சி செய்தல், நீர் மறுபயன்பாடு மற்றும் கார்பன் பிடிப்பு தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

2030 ஆம் ஆண்டுக்குள் Mobile eXperience மற்றும் Visual Display போன்ற வாடிக்கையாளர் மின்னணு வணிகங்களை உள்ளடக்கிய அதன் சாதன அனுபவப் பிரிவில் அனைத்து செயற்பாடுகளுக்கும் நிகர பூஜ்ஜிய கார்பன் வெளியேற்றத்தை அடைவதை நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது. Memory, System LSI மற்றும் Foundry வணிகங்களை உள்ளடக்கிய 2050 ஆம் ஆண்டளவில் சாதன தீர்வுகள் பிரிவுக்கு இலக்கு விரிவடைகிறது. மேலும், Samsung உலகளாவிய முன்முயற்சியான RE100 இல் இணைந்துள்ளது. அதன் சர்வதேச சந்தைகளின் மின்சாரத் தேவைகளை ஐந்து ஆண்டுகளுக்குள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுடன் பொருத்த உறுதியளிக்கிறது.

**2050க்குள் நிகர பூஜ்ஜிய நேரடி மற்றும் மறைமுக கார்பன் வெளியேற்றம்**

Samsung Electronics 2050 ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய கார்பன் வெளியேற்றத்தை அடைய உறுதிபூண்டுள்ளதுடன், DX பிரிவு 2030 இல் முன்னணியில் இருக்கும். Semiconductor உற்பத்தியில் செயல்முறை வாயுக்களைக் குறைப்பதற்கான புதிய செயல்முறைகளை உருவாக்குவது உட்பட கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்புக்கான புத்தாக்கமான தொழில்நுட்பங்களில் அவர்கள் பெரிதும் முதலீடு செய்வார்கள். நிறுவனம் கழிவு வெப்ப பயன்பாட்டை விரிவுபடுத்துவதையும் மின்சார வெப்ப மூலங்களை ஆராய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**Ultra-Low ஆற்றல் தயாரிப்புகள் மற்றும் ஆதார சுற்றறிக்கை**

ஆரோக்கியமான பூகோளத்திற்கான Samsung Electronics இன் உறுதிமொழியின் ஒரு பகுதியாக அதன் தயாரிப்புகள் ஆற்றல்-திறனுள்ளவை மற்றும் குறைந்த மின்சாரத்தைப் பயன்படுத்துவதை உறுதி செய்வதையும் உள்ளடக்கியது. அதே நேரத்தில் மூலப்பொருள் ஆதாரம் முதல் அகற்றுதல் மற்றும் மீள்சுழற்சி வரை முழு தயாரிப்பு வாழ்க்கைச் சுழற்சியும் மிகவும் நிலையானதாக இருப்பதை உறுதிசெய்கிறது.

**Ultra-Low ஆற்றல் Semiconductors மற்றும் ஆற்றல்-திறனுள்ள தயாரிப்புகள்**

2025 ஆம் ஆண்டளவில் தரவு மையங்கள் மற்றும் மொபைல் சாதனங்களில் பயன்படுத்தப்படும் Memory தயாரிப்புகளின் மின் விரையத்தைக் குறைக்க Ultra-Low Power Memory Chip களை அவர்கள் உருவாக்கி வருகின்றனர். மேலும், நிறுவனம் 2019 விவரக்குறிப்புகளுடன் ஒப்பிடும்போது 2030 ஆம் ஆண்டளவில் சராசரியாக 30 சதவிகிதம் மின் விரையத்தைக் குறைக்கும் நோக்கத்துடன், முக்கிய வாடிக்கையாளர்களுக்கான மின்னணுவியலில் குறைந்த சக்தி தொழில்நுட்பங்களை இணைக்கத் திட்டமிட்டுள்ளது. Samsung Electronics, விநியோகச் சங்கிலிகள், ஏற்றி இறக்கல்கள் மற்றும் ஆதார சுற்றறிக்கை உள்ளிட்ட மதிப்புச் சங்கிலி முழுவதும் காபன் வெளியேற்றதத்தைக் குறைக்க உறுதிபூண்டுள்ளது.

**ஒட்டுமொத்த தயாரிப்பு வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் வள சுற்றறிக்கையை அதிகப்படுத்துதல்**

Samsung Electronics தயாரிப்பு வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் அதன் Electronics வள சுழற்சியை மேம்படுத்த உறுதி பூண்டுள்ளது. அவர்கள் பொருள் மீள் சுழற்சி தொழில்நுட்பங்களை ஆராய்ச்சி செய்வதற்கும், கழிவுகளிலிருந்து வளங்களைப் பிரித்தெடுப்பதற்கும் அதிகபட்ச ஆதார சுற்றறிக்கையை இலக்காகக் கொண்டு ஒரு சுற்றறிக்கை பொருளாதார ஆய்வகத்தை நிறுவுகின்றனர். 2030 ஆம் ஆண்டுக்குள் சேகரிக்கப்பட்ட அனைத்து கழிவு Battery களிலிருந்தும் கனிமங்களை மீண்டும் பயன்படுத்தவும் மீள்சுழற்சி செய்யப்பட்ட Resin லிருந்து தயாரிக்கப்பட்ட அதன் தயாரிப்புகளில் 50% பிளாஸ்ரிக்கை வைத்திருக்கவும் Samsung திட்டமிட்டுள்ளது. 2050 இல் இந்த இலக்கு 100% ஆக அதிகரிக்கும். 2030 ஆம் ஆண்டுக்குள் 180 நாடுகளுக்கு மின்னணு கழிவு சேகரிப்பு முறையை விரிவுபடுத்தவும் 2030 ஆம் ஆண்டுக்குள் ஒட்டுமொத்தமாக 10 மில்லியன் தொன் மின்னணு கழிவுகளை சேகரிக்கவும் இலக்கு வைத்துள்ளனர். இது தொழில்துறையின் மிக உயர்ந்த இலக்காகும்.

**நீர் பாதுகாப்பு மற்றும் மாசுபடுத்தும் சிகிச்சை நடவடிக்கைகள்**

Samsung Electronics நீர் வள செயல் திறனை அதிகரிக்க உறுதிபூண்டுள்ளது. 2030 ஆம் ஆண்டளவில் கொரியாவில் Semiconductor நடவடிக்கைகளில் இருந்து நீர் திரும்பப் பெறுவதற்கான தேவைகள் இரட்டிப்பாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், நீர் மறுபயன்பாட்டை அதிகப்படுத்துவதன் மூலம் 2021 அளவில் உண்மையான நீர் திரும்பப் பெறுவதை நிறுவனம் திட்டமிட்டுள்ளது. DX பிரிவு நீர் சுத்திகரிப்பு வசதிகளை மேம்படுத்துவதோடு மறுசீரமைப்புத் திட்டங்கள் மூலம் 2030 ஆம் ஆண்டுக்குள் பயன்படுத்தும் அதே அளவு தண்ணீரை மீட்டெடுக்கும். DS பிரிவு, குறைக்கடத்தி உற்பத்தியின் போது வெளியாகும் மாசுக்களை அகற்றவும், 2040க்குள் சுற்றுச்சூழலில் அவற்றின் தாக்கத்தைக் குறைக்கவும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், Samsung 2025 க்குள் அனைத்து உலகளாவிய செயற்பாடுகளுக்கும் பிளாட்டினம் அளவிலான Zero Waste to Landfill சான்றிதழைப் பெறத் திட்டமிட்டுள்ளது.

**நிலையான எதிர்காலத்திற்கான புத்தாக்கமான தொழில்நுட்பங்களில் முதலீடு செய்து மேம்படுத்தவும்**

உலகளாவிய காலநிலை சவால்களை எதிர்கொள்ள Samsung Electronics அதன் முன்னணி தொழில்நுட்பத்தை மேம்படுத்துகிறது. கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்க கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாட்டுத் தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல் மற்றும் தூசு மாசுபாட்டைச் சமாளிக்க சுத்தமான காற்று தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது. Samsung மேம்பட்ட தொழில்நுட்ப நிறுவனத்தில் நிறுவப்பட்ட Carbon Capture Research Institute குறைக்கடத்தி தொழில்துறைத் தளங்களுக்கான கார்பன் தரவு மற்றும் பயன்பாட்டு தொழில்நுட்பங்களில் முன்னோடியாக உள்ளது. இந்த தொழில்நுட்பங்கள் படிப்படியாக நிறுவனம் மற்றும் அதன் விநியோகஸ்தர்கள் முழுவதும் செயற்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பொறுப்பு மற்றும் கண்காணிப்பு முன்னேற்றம்**

பொறுப்புணர்வை உறுதிப்படுத்த, Samsung Electronics அதன் முயற்சிகளை நியமிக்கப்பட்ட நிறுவனங்களால் புறநிலையாக சரிபார்க்கும். Samsung Institute of EHS Strategy யின் சான்றிதழ் அமைப்பில் பங்கேற்பதன் மூலம் அதன் செயல்திறன் மதிப்பிடப்படும் மற்றும் மூன்றாம் தரப்பு நிபுணர்களை உள்ளடக்கிய கார்பன் வெளியேற்றக் குறைப்பு சரிபார்ப்புக் குழுவால் சரிபார்க்கப்படும்.

நிகர பூஜ்ஜியம் மற்றும் வட்டப் பொருளாதார இலக்குகள் உட்பட ஒவ்வொரு சுற்றுச்சூழல் இலக்கிற்கும் நிறுவனம் செயல்படுத்தும் சாலை வரைபடங்களை உருவாக்கியுள்ளது. மேலும் முன்னேற்றத்தைக் கண்காணித்து பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் வெளிப்புற பணிப்பாளர்கள் அடங்கிய நிலைத்தன்மைக் குழுவின் மூலம் நிலையான செயற்படுத்தலை உறுதி செய்யும்.

# மக்கள் வங்கி விசுவமடுவில் சேவை மையத்தை திறந்துவைத்துள்ளது

மக்கள் வங்கி தனது புதிய சேவை மையத்தை விசுவமடு நகரில் அண்மையில் திறந்து வைத்துள்ளது.

பண மீள்சுழற்சி இயந்திரம் (CRM) உள்ளிட்ட நவீன டிஜிட்டல் வங்கிச் சேவைகளை இச்சேவை மையம் வழங்குகிறது. இது வருடத்தில் 365 தினங்களும் நாளில் 24 மணி நேரமும் பணம் மீளப் பெறுதல், வைப்புகள் மற்றும் கட்டணப் பட்டியல் கொடுப்பனவு செலுத்துதல் ஆகியவற்றுக்கு இடமளிக்கின்றது.

மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (மார்க்க முகாமைத்துவம்) ரி.எம்.டபிள்யூ. சந்திரகுமார,வன்னி பிராந்திய முகாமையாளர் ஏ. ஜயசித், தர்மபுரம் மத்திய கல்லூரியின் அதிபர் திருமதி கந்தசாமி இந்தேகாந்தி, மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய உதவிப் பிராந்திய முகாமையாளர்கள் எஸ்.பி.சூரியகுமாரன், எஸ்.வி.ஜி.ஜே.செல்லையா, பரந்தன் கிளை முகாமையாளர் எம்.ஏ.பிரான்சிஸ், விசுவமடு சேவை மைய முகாமையாளர் ஜி.ஜெயகணேசன், அரச உத்தியோகத்தர்கள், வங்கி ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.





## Microsoft Imagine Cup 2023 க்கான இறுதிப்போட்டிக்கு தெரிவாகிய இலங்கையின் போட்டியாளர்கள் அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கைச் சந்தித்தனர்

Microsoft Imagine Cup 2023 இன் உலக இறுதிப் போட்டிகளில் பங்கேற்பதற்காக இலங்கையிலிருநது தெரிவுசெய்யப்பட்ட இரு அணிகளைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி ஜே. சங்குடன் சந்திப்பை மேற்கொண்டனர். Microsoft அலுவலகத்துக்கு தூதுவர் அண்மையில் விஜயம் மேற்கொண்டிருந்த போது இந்தச் சந்திப்பு நடைபெற்றது. Sipsara மற்றும் The Green Tycoon ஆகிய அணிகள்Microsoft Imagine Cup 2023 போட்டியில் இலங்கை சார்பாக போட்டியிடத் தெரிவாகியிருந்தன. புவி, கல்வி, சுகாதாரம் மற்றும் வாழ்க்கைமுறை ஆகியன தொடர்பில் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் காணப்படும் பெருமளவான பிரச்சினைகளுக்கு மாணவர்களால் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தீர்வு காண்பதை ஊக்குவிக்கும் வகையில் இந்தப் போட்டித் தொடர் ஏற்பாடு செய்யப்படுகின்றது. அணியினருடன் சந்திப்பை மேற்கொண்டிருந்த போது சமூகத்துக்காக அவர்களின் சிந்தனைப் பங்களிப்பால் எய்தக்கூடிய பயன் தொடர்பில் பாராட்டுதல்களையும் தெரிவித்திருந்தார்.

Microsoft தென் கிழக்கு ஆசியா புதிய சந்தைகள் (SEA NM) பொது முகாமையாளர் சூக் ஹூன் சீஹா மற்றும் Microsoft ஸ்ரீ லங்கா மற்றும் மாலைதீவுகளுக்கான முகாமையாளர் ஹர்ஷ ரந்தெனி ஆகியோர் அமெரிக்கத் தூதுவர் சங்கை வரவேற்றிருந்தனர்.




*Microsoft Imagine Cup 2023 உலக இறுதிப் போட்டியில் பங்கேற்கச் செய்த செயற்றிட்டங்கள் பற்றிய விளக்கங்களின் பின்னர் Sipsara மற்றும் The Green Tycoon அணியினர் தூதுவர் சங்குடன் காணப்படுகின்றனர்.*

தொழில்நுட்பசார் புத்தாக்கம் தொடர்பில் காணப்படும் எல்லைகளை மறுசீரமைத்து ஆக்கத்திறன் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்தி கல்வி மற்றும் புவி ஆகிய பிரிவுகளில் இலங்கையின் இரு அணிகளும் போட்டியிட்டிருந்தன. Sipsara அணியினால் மன நலிவு நோய் காணப்படும் சிறுவர்கள் மத்தியில் திறன்களை அளவிடல் மற்றும் கட்டியெழுப்பலுக்குப் பயன்படக்கூடிய இணைய அடிப்படையிலான அப்ளிகேஷன் ஒன்று வடிவமைக்கப்பட்டிருந்தது. The Green Tycoon அணியினால், காபன் வெளியீட்டை தணிப்பது காபன் வரிகளைக் குறைப்பது மற்றும் பசுமையை ஊக்குவிக்கும் வகையில் காபன் வெளியீட்டை கண்காணிக்கும் மாற்று நிலைபேறான தெரிவான CarboMeter' என்பது வடிவமைக்கப்பட்டிருந்தது.

விஜயத்தின் போது அணியினருக்கு தமது சிந்தனைகளை அமெரிக்கத் தூதுவர் சங்குக்கும், சூக் ஹூன் சீஹாவுளுக்கும் வெளிப்படுத்தும் வாய்ப்புக் கிடைத்திருந்ததுடன், Microsoft Imagine Cup இல் பங்கேற்றதன் மூலம் தாம் பெற்றுக் கொள்ளும் அனுபவத்தையும் பகிர்ந்திருந்தனர். தம்முடன் பிரத்தியேகமான




*அமெரிக்கத் தூதுவர் சங் மற்றும் Microsoft SEA NM பொது முகாமையாளர் சூக் ஹூன் சீஹா ஆகியோர் இலங்கையின் Sipsara அணியினர் மற்றும் Microsoft ஸ்ரீ லங்கா பிரதிநிதிகளுடன் காணப்படுகின்றனர்.*

தொடர்பைக் கொண்டிருந்த பிரச்சினைகள் தொடர்பில் இந்த மாணவர்கள் கவனம் செலுத்தியிருந்ததுடன் Microsoft Imagine Cup பயணத்தினூடாக AI இன் சக்தியினூடாக தம்மால் எய்தக்கூடிய விடயங்களை அடைய ஊக்குவிப்புகள் கிடைத்திருந்ததாகக் குறிப்பிட்டிருந்தனர்.

தூதுவர் சங் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் இரு அணிகளையும் சந்தித்ததில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். அவர்களின் திறன்கள் மற்றும் ஆற்றல்களினூடாக நாட்டுக்கு குறிப்பிடத்தக்களவு பெருமை சேர்க்கப்பட்டுள்ளது. மாற்றத்துக்கான வழிகோலியாக புத்தாக்கம் அமைந்திருப்பதுடன் நிலைபேறான மற்றும் சுபீட்சமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு இலங்கைக்கு முக்கியமானதாக அமைந்துள்ளது. Microsoft Imagine Cup போன்ற கட்டமைப்புகளினூடாக தொழில்நுட்ப சிறப்பைக் கட்டியெழுப்பும் Microsoft இன் முயற்சிகள் பாராட்டுதலுக்குரியவை. இலங்கையிலும் அதற்கப்பாலும் பிரகாசமான எதிர்காலத்தை இவை அடையாளப்படுத்துகின்றன." - என்றார்.

Microsoft SEA NM பொது முகாமையாளர் சூக் ஹூன் சீஹா கருத்துத் தெரிவிக்கையில், "தூதுவர் சங்குடன் இலங்கையின் இரு அணியினரையும் தொடர்புபடுத்துவதற்கும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உள்ளடக்கமான செயற்றிட்டங்களை உருவாக்கும் விளக்கங்களையும் அவருடன் பகிர்ந்து கொள்வதற்கும் இது ஒரு சிறந்த சந்தர்ப்பமாக அமைந்திருந்தது. நிஜ உலக பிரச்சினைகளைத்தீர்ப்பதில் அவர்களின் புத்தாக்கங்கள் ஊக்கமளிப்பதாக அமைந்திருப்பதுடன் பலரின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் வலிமையையும் கொண்டுள்ளன. டிஜிட்டல் துரிதப்படுத்தல் தொடர்பில் இலங்கையினால் வழங்கக்கூடிய பங்களிப்புக்கும் சர்வதேச டிஜிட்டல் பொருளாதாரத்தை எய்துவதில் பங்களிப்பு வழங்குவதற்கும் இந்த மாணவர்களின் திறமைகள் சிறந்த உதாரணமாக அமைந்துள்ளன." - என்றார்.

தற்படைப்பாற்றல், டிஜிட்டல் திறன்களை மேம்படுத்தல் மற்றும் தொழில்நுட்பத்தின் மாற்றியமைக்கும் வலுவைப் பயன்படுத்தல் போன்றவற்றை உருவாக்குவதற்கு Microsoft தன்னை அர்ப்பணித்துள்ளது. Microsoft Imagine Cup இனால் மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பத்தில் தமது திறன்களையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தவும் நாட்டின் தொழில்நுட்பசார் கட்டமைப்பு மற்றும் விருத்திக்கு பங்களிப்பு வழங்கவும் உதவுவதாக அமைந்துள்ளது. இவ்வாறான இளம் சிறந்தனையாளர்களினால் எதிர்காலம் வழிநடத்தப்படுகின்றது எனும் உறுதியான நம்பிக்கையை ஊட்டுவதுடன் அடுத்த தலைமுறை படைப்பாற்றல் மற்றும் பிரச்சினை தீர்ப்போருக்கு வலுவூட்டல்களை உதவுவதாகவும் அமைந்துள்ளது.

# இலங்கை மருந்தாக்கல் கைத்தொழில் சம்மேளன தலைவராக பிரதாபன் மயில்வாகனம் நியமனம்

இலங்கை மருந்தாக்கல் கைத்தொழில் சம்மேளனத்தின் (SLCPI) 62 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் ஜூன் 23 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களை உள்ளடக்கிய நாட்டிலுள்ள தனியார் மருந்து சந்தையில் 80% க்கும் அதிகமான பங்கைக் கொண்ட 60க்கும் மேற்பட்ட உறுப்பு நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உயர்மட்ட அமைப்பாகச் சேவையாற்றி வருவதுடன் மதிப்புமிக்க கறையற்ற வரலாற்றைக் கொண்டுள்ளது.

2022/2023 ஆம் ஆண்டிற்கான சம்மேளனத்தின் தலைவராக பிரதாபன் மயில்வாகனத்தை சபை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தது. Emerchemie NB (Ceylon) Ltd இன் பிரதித் தலைவர்/குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மயில்வாகனம் புதிய அலுவலகப் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களைக் கொண்ட சம்மேளனத்திற்குத் தலைமை தாங்குவார். இதன் மூலம் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் ஆயுட்காலம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக அனைத்து பங்குதாரர்களுடனும் வலுவான பங்களிப்பை மேற்கொள்வார். இந்தத் துறையானது நேரடியாக 80,000 பேருக்கு வேலைவாய்ப்பை வழங்குவதுடன் மறைமுகமாக சுமார் 4,00,000 பேருக்கு ஒத்துழைப்புகளை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரதாபன் தனது சிறப்புரையில்,தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணைக்குழு (NMRA) விலை நிர்ணய பொறிமுறையை கடைப்பிடிப்பது முக்கியம் என்று குறிப்பிட்டார். ஏனெனில், தொழில்துறையானது பொருளாதார மந்தநிலையின் விளைவுகளை எதிர்நோக்கும்போது அதிகாரிகளால் அமுல்படுத்தப்பட்ட 16% குறைப்பை எதிர்கொண்டது. நோயாளிகளை மையமாகக் கொண்ட விலைக் குறைப்பை தொழில்துறை எதிர்க்கவில்லையென்றாலும் இறுதி சில்லறை விலையை நிர்ணயிப்பதில் மருந்துத் துறையின் தனிப்பட்ட செலவினங்களைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம் என்று அவர் கூறினார்.

"குறைந்த இலாபத்துடன் பணிபுரியுமாறு தொழில்துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டாலும், Cold Chain பராமரிப்பு, வெப்பநிலை கட்டுப்பாட்டு Warehouses மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள், போக்குவரத்து மற்றும் மறைக்கப்பட்டவை உட்பட மருந்துத் துறையுடன் தொடர்புடைய தனிப்பட்ட செலவினங்களைக் கருத்தில் கொள்வது மிகவும் முக்கியமானது என்று நாங்கள் நம்புகிறோம். எரிபொருள் விலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய செலவுகளுக்கு அதிக உணர்திறன் கொண்ட தள்ளுபடி செலவுகள் அடுத்த மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள் தொழில் துறை சார்ந்த செலவினங்களைக் கருத்தில் கொண்டு நோயாளிகளுக்கு இறுதிப் பலனைக் கொண்டு செல்லும் நியாயமான மற்றும் செயற்படக்கூடிய விலை பொறிமுறையை நாங்கள் உருவாக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்." எனத் தெரிவித்தார்.






இந்த வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு பிரதம அதிதியாக கலந்துகொண்ட சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்ல தனது உரையின் போது, முன்னாள் தலைவர் சஞ்ஜீவ விஜேசேகர இலங்கைக்கு நன்மை அளிக்கும் விதமாக அமைச்சுக்கும் SLCPIஐ க்கும் இடையில் பரஸ்பர ஒத்துழைப்பின் சகாப்தத்தை அறிமுகப்படுத்தியதற்காக நன்றி தெரிவித்தார். நெருக்கடி நிலையின் போது நாட்டின் நிதிச் சுமைகளைத் தணிக்கும் வகையில் இந்திய கடன் வரி மூலம் இலங்கைக்கு அவசர உதவிகளை வழங்கியமைக்காக நிகழ்வில் கலந்துகொண்ட இந்திய உயர்ஸ்தானிகருக்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

மருந்துப் பொருட்களின் விலை நிர்ணயம் தொடர்பாகவும் அமைச்சர் உரையாற்றுகையில், "தற்போதைய அமெரிக்க டொலரின் மதிப்புக் குறைவால் மருந்துகளின் விலையைக் குறைக்க முடிவு செய்தோம். எவ்வாறாயினும், மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் நீண்டகாலத் தீர்வு வழங்கப்படும் வரை இது ஒரு தற்காலிக தீர்வாகும்" - எனத் தெரிவித்தார்.

இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக புதிய விலை நிர்ணயக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் வலியுறுத்தினார். NMRA இன் புதிய நிர்வாகம் இலங்கை வாழ் மக்களுக்கு ஒரு பயனுள்ள கட்டுப்பாட்டாளராக அதன் பொறுப்பை உறுதிப்படுத்தும் வகையில் சாதகமான சீர்திருத்தங்களை அமுல்படுத்தி வருவதாகவும் அமைச்சர் மேலும் வலியுறுத்தினார். SPC இன் நீண்டகால கடன் தீர்வு அரசாங்கத்திற்கு அதிக முன்னுரிமை என்று அமைச்சர் மேலும் தொழில் துறைக்கு உறுதியளித்தார். இறுதியாக, தொழில்துறையின் எந்தவொரு மற்றும் அனைத்து கவலைகளையும் தீர்க்க தன்னுடனும் அமைச்சுடனும் இணைந்து பணியாற்றுமாறு தொழில் துறையில் உள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் அமைச்சர் அழைப்பு விடுத்தார்.

"ஓர் அமைப்பாக அல்லது தனிநபர் என்ற ரீதியில் நீங்கள் எதிர்கொள்ளக்கூடிய எந்தவொரு பிரச்சினையையும் கலந்துரையாடுவதற்கு எனது கதவு திறந்தே உள்ளது" - என அமைச்சர் ரம்புக்வெல்ல இதன்போது தெரிவித்தார்.

2023/2024க்கான SLCPI இன் அலுவலகப் பொறுப்பாளர்களாக தலைவர் - பிரதாபன் மயில்வாகனம் Emerchemie NB (Ceylon) Ltd இன் துணைத் தலைவர்/குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி), உடனடி முன்னாள் தலைவர் - சஞ்ஜீவ விஜேசேகர (நிறைவேற்று அதிகாரமுடைய பணிப்பாளர், George Steuart Health Pvt. Ltd.), சிரேஷ்ட பிரதித் தலைவர் - Azam Jaward (முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி, Cipla – Breath Free Lanka Pvt. Ltd.), துணைத் தலைவர் - சாந்த பண்டார ((CEO, Sunshine Health Lanka Ltd.), செயலாளர் - சிறிமல் பெர்னாண்டோ (பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, Astron Limited) மற்றும் கௌரவ. பொருளாளர்- ரசிக ஹிரிமுத்துகொட (பிரதம நிறைவேற்று அதிகாரி (Darley Butler & Co Ltd). ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

உலகெங்கிலும் உள்ள 438 உற்பத்தியாளர்களிடமிருந்து 1,239 மூலக்கூறுகளை உள்ளடக்கிய அனைத்து உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களின் பலத்தை மேலும் ஒருங்கிணைத்து இலங்கையிலுள்ள அனைத்து நோயாளிகளுக்கும் மலிவு விலையில் அவற்றை வழங்குவதற்கு SLCPI உறுதியாக உள்ளதாக பிரதாபன் மயில்வாகனம் தலைமையிலான புதிய நிர்வாகக் குழுவினர் உறுதிபூண்டுள்ளனர்.

## பேண்தகைமை அபிவிருத்திக்கான ஒன்றுகூடல்:

# தோட்டத் தொழில் துறைக்கான முதலாவது Global Plantation Summit ஐ நடத்தும் ஹெய்லிஸ்

முற்போக்கான தோட்ட முகாமைத்துவத்தில் இலங்கையின் முன்னோடிகளான ஹெய்லிஸ் பிளான்டேஷன்ஸ், ஆரம்ப சர்வதேச பேண்தகைமை உச்சி மாநாட்டை ஆரம்பித்துள்ளதாக அறிவித்தது.எதிர்வரும் காலங்களில் இது உள்ளூர் மற்றும் உலகளாவிய நிபுணர்களை ஒன்றிணைத்து அவர்களின் நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்வதற்கும் தோட்டத் தொழிலை மறுவடிவமைக்கும் ஆற்றலுடன் கூடிய அதிநவீன புத்தாக்கங்களை வெளிப்படுத்துவதற்கும் ஆகும்.

புத்திஜீவிகள், அரசு மற்றும் அரசு சாரா அதிகாரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து இந்த மாநாடு 21 ஜூலை 2023 அன்று நடைபெறும்.

இந்த மாநாடு 'நிலையான தோட்டங்களை நோக்கி மறுவடிவமைக்கப்பட்டது. மறுவடிவமைப்பு செய்யப்பட்டது | நெகிழ்ச்சியானது' என்ற தொனிப்பொருளின் கீழ் நடைபெறவுள்ளது. ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான புதிய வழிகளை உருவாக்குதல் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) நவீன தோட்ட முகாமைத்துவ உத்திகளில் இணைத்துக்கொள்வதே இதன் நோக்கமாகும்.

ஹெய்லிஸ் பெருந்தோட்ட நிறுவனங்களின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி ரொஷான் ராஜதுரை கருத்துத் தெரிவிக்கையில், "இந்த சர்வதேச நிலைத்தன்மை உச்சிமாநாட்டை நடத்துவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். ஏனெனில், இது சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வதற்கும் நிலையான நிர்வாகத்தை நோக்கி நீண்டகால மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் தொழில்துறை முழுவதும் பங்குதாரர்களை ஒன்றிணைப்பதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பாகும். இந்த முயற்சியானது, தொழில்துறை முழுவதும் நேர்மறையான மாற்றம் மற்றும் புத்தாக்கங்களை உருவாக்கும் அதே வேளை, அர்த்தமுள்ள உரையாடல் மற்றும் ஒத்துழைப்புக்கான தளமாக செயற்படும் என்று நாங்கள் நம்புகிறோம்" - எனத் தெரிவித்தார்.

BIO (Biosphere), GEO (Geosphere), SOCIO (Social) மற்றும் ECONO (Economy) ஆகிய துறைகளை ஒருங்கிணைப்பதில் தோட்ட நிர்வாக மாதிரிகளில் நிலையான, நெறிமுறை மற்றும் சமமான மதிப்புகளைப் பகிர்ந்து கொள்வதில் மாநாடு கவனம் செலுத்தும். உச்சிமாநாட்டின் நோக்கங்களில் வணிக செயல்முறைகளின் நீண்டகால ஸ்திரத்தன்மையை வரையறுக்கும் தனித்துவமான - நிலையான காரணிகளை அடையாளம் காணுதல், தற்போதைய சவால்களுக்கு சாத்தியமான நீண்டகாலத் தீர்வுகளை முன்மொழிதல், பொதுவான சவால்களுக்கு பல துறை ஒத்துழைப்புக்கான தளத்தை உருவாக்குதல் மற்றும் நீண்ட கால சிறந்த நடைமுறைகளை இயக்குதல் ஆகியவை அடங்கும்.

மாநாட்டில் புத்திஜீவிகள், அரசு மற்றும் அரசு சாரா அதிகாரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் உட்பட பலவகை பங்குதாரர்களுடன் இணைந்து இந்த செயலமர்வு இடம்பெறும். இறுதி மாநாட்டில் உயர்மட்ட நிபுணர்களின் முக்கிய உரைகள், சிறந்த நடைமுறைகளைப் பகிர்வதற்காக அர்ப்பணிக்கப்பட்ட அமர்வுகள், பல்வேறு பங்குதாரர் குழுக்களை உள்ளடக்கிய குழு விவாதங்கள் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் விவசாயத் தீர்வுகளைக் காண்பிக்கும் கண்காட்சி ஆகியவை அடங்கும்.

மூன்று உயர்தர பிராந்திய தோட்ட நிறுவனங்களான களனிவெளி பிளான்டேஷன்ஸ் பி.எல்.சி. (KVPL), தலவாக்கலை டீ எஸ்டேட்ஸ் பி.எல்.சி. (TTEL) மற்றும் ஹொரண பிளான்டேஷன்ஸ் பி.எல்.சி. (HPL) ஆகியவற்றை உள்ளடக்கிய ஹெய்லிஸ் பெருந்தோட்டத் துறையானது சுமார் 26,137 ஹெக்டேயர் நிலப்பரப்பில் 60 தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களை கொண்ட மூன்று தனித்துவமான வேளாண்-காலநிலைப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள்,தொழிலாளர் தரநிலைகள், சுற்றுச்சூழல் மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆகியவற்றில் UNGC10 கொள்கைகளில் கையெழுத்திட்ட தொழில்துறையில் ஹேய்லிஸ் பிளான்டேஷன்ஸ் முதன்மையானது மற்றும் ஐக்கிய நாடுகளின் CEO நீர் ஆணையத்திற்கு உறுதியளிக்கிறது. வெளிப்படைத்தன்மை, ஆளுகை, பொறுப்புக்கூறல் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றிற்காக CA ஸ்ரீலங்காவினால் வழங்கப்பட்ட சிறந்த 3 நிறுவனங்களில் RPC களும் உள்ளன. அதேநேரம், காலநிலை தொடர்பான நிதி வெளிப்படுத்தல்களுக்கான (TCFD) பணிக்குழுவின் ஒரு பகுதியாகவும் உள்ளது. குறிப்பிடத்தக்க வகையில் இத்துறை அறிவியல் அடிப்படையிலான இலக்கு முயற்சிகளுக்கு (SBTi) உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.






# n h நிறுவனத்தின் புதிய கிளை

## பத்தரமுல்ல பிரதேசத்தில் கோலாகலமாகத் திறப்பு

வீட்டுக்குத் தேவையான பல்வேறு பொருட்களை ஒரே கூரையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு வசதி அளிக்கும் Phoenix நிறுவனம் அதன் புதிய கிளையை அண்மையில் பத்தரமுல்ல நகரில் திறந்துள்ளது. கொழும்பு, பத்தரமுல்ல, மாலபே, பெலவத்தை மற்றும் தலவத்துகொட போன்ற பிரதேசங்களில் வசிக்கும் வாடிக்கையாளர்களுக்கு பரந்துபட்டதான சூழலில் Phoenix உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கு வசதியளிப்பதே இப்புதிய கிளைத் திறப்பின் பிரதான நோக்கமாகும். புதிதாகத் திறக்கப்பட்டுள்ள கிளை மகத்தான அனுபவங்களைக் கொண்டதொரு இடமாக செயற்படுவதோடு வாடிக்கையாளர்களுக்கு மனங்கவர் ஷொப்பிங் அனுபவத்தைப் பெறுவதற்கு வழியமைக்கிறது. இங்கு பரந்துபட்ட




பல்வேறு உற்பத்திகளில் தமது தேவைக்கேற்ப உற்பத்திகளைத் தெரிவுசெய்வதற்கு வாடிக்கையாளர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.

புத்தாக்கங்கள், தரம் மற்றும் சமகால உற்பத்திகளுக்கு Phoenix நிறுவனத்தின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கும் வகையில் பத்தரமுல்ல நகரக் கிளையமைப்பு திட்டமிடப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். வாடிக்கையாளர்களுக்கு தமது வீட்டை சொர்க்கபுரியாக மாற்றும் வகையிலான தளபாடங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் மேலும் பல பொருட்களுடன் அலுவலக சாதனங்களும் பெருமளவில் இங்கு காணப்படுகின்றன. இப் புதிய கிளையை திறந்ததன் மூலம் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வழங்குவோர் மத்தியில் Phoenix நிறுவனம் எந்தளவு முதன்மையான இடத்திலுள்ளதென்பதை மேலும் உறுதிப்படுத்துவதே நிறுவனத்தின் நோக்கமாகும். சிறந்த வாடிக்கையாளர் சேவை மற்றும் உயர்தரத்திலான உற்பத்திகளை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துவதற்கு Phoenix நிறுவனம் அர்ப்பணிப்புடன் உழைத்து வருகின்றது. இந்நிறுவனத்தின் பிரதான இலக்காக உள்ள வாடிக்கையாளர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறும் வகையிலான உற்பத்திகளைப் படைப்பதற்கு இது பெரிதும் உந்துசக்தியாக இருக்குமென Phoenix நிறுவனம் நம்புகிறது.

# சுகாதார அமைச்சரை சந்தித்த அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர்

## தொழில்சார் பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்து ஆராய்வு

சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவுக்கும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அதிகாரிகளுக்குமிடையிலான விசேட கலந்துரையாடலொன்று 11ஆம் திகதி சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

சுகாதார அமைச்சுக்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையில் நிலவும் தொழில்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்த விசேட சந்திப்பு இடம்பெற்றது.

சம்பள முரண்பாடுகள், சம்பள அதிகரிப்புகள், ஓய்வுபெறும் வயது, பேராசிரியர் சேனக பிபிலேவின் மருந்துக்கொள்கையை நடைமுறைப்படுத்துதல், வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புச் சேவைகள் தொடர்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான தொடர் முன்மொழிவுகளும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் சுகாதார அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டது.

தற்போதுள்ள பிரச்சினைகள் குறித்து தாம் ஓரளவு புரிந்துகொண்டுள்ளதாகவும் நிதியமைச்சு மற்றும் ஏனைய துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி தீர்வுகளை வழங்குவதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வைத்தியர்களான தீபால் அத்தநாயக்க, அமல் பெரேரா, பிரபாத் பிரியநந்தன, நிரோஷன பிரேமரத்ன, குழு உறுப்பினர்களான டொக்டர்.கே.மணிவகன், டொக்டர் உதய ரணசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அபிவிருத்தித் திட்டங்களுக்கான திட்ட அறிக்கைகளை தயாரித்து விலைமனுக்கோரலை ஆரம்பிக்கவும்

## அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை

அடுத்த வருடம் அமுல்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கான திட்ட அறிக்கைகளைத் தயாரித்து இப்போதே விலை மனுக்கோரலை ஆரம்பிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீளாய்வுக் கூட்டம் பத்தரமுல்லையில் உள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று (13) இடம்பெற்றது. அந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய திட்டங்களை ஆரம்பிக்கும் போது அந்தந்த மாவட்டங்களின் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடி அதற்கான வேலை ஒழுங்கமைப்பு தயாரிக்க வேண்டும்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் ஆளும் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிகளின் அரசியல் பிரதிநிதிகள் பங்கேற்பதால், அது தொடர்பான திட்டங்களை விமர்சனங்களின்றி முன்னெடுக்க முடியும்.



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் பல நிறுவனங்கள் உள்ளன. அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தும் போது அதற்குத் தேவையான அடிப்படைப் பணிகளை அமைச்சின் கீழ் இயங்கும் அந்த நிறுவனங்களே மேற்கொள்ள வேண்டும். இதனால் வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் பெருமளவான பணத்தை அமைச்சுக்குள்ளேயே வைத்திருக்க முடியும்.

அத்துடன், எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பிக்கும்போதும் ஒதுக்கப்படும் பணத்துக்கேற்ப அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். மாறாக குறைந்த பணத்தில் பாரிய திட்டங்களை ஆரம்பித்தால் அத்திட்டத்தை இடையில் நிறுத்தவேண்டிய நிலை ஏற்படும் .

இதனால் பணம் விரயமாவது மாத்திரமன்றி பொதுமக்களும் அரசாங்கமும் அசௌகரியங்களுக்கு உள்ளாகும்நிலை ஏற்படும்.

அரசாங்கம் தற்போது பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. எனவே, அரசாங்கத்துக்கு சுமை ஏற்படாத வகையில் அரச மற்றும் தனியார் துறைகளை இணைத்து அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அதிகாரிகள் ஆராய வேண்டும் என்றும் கூறினார்.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்தா அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மககொடை ஸாவியாவில் சாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸ்

பேருவளை செய்தியாளர்

பேருவளை, மககொடை ஸாவியாவில் ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஸ்தாபகர் அல் - குத்புல் அக்பர் இமாம் அபுல்ஹசன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் 850ஆவது ஜனனதினத்தை முன்னிட்டும் ஆத்மீகஞானி அல்-குத்பு அல் - முஹம்மதிப்னு முஹம்மத் அல்-பாஸி அஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் ஜனனதினத்தை முன்னிட்டும் இலங்கையில் ஷாதுலிய்யா தரீக்காவை அறிமுகம் செய்த ஆத்மீக ஞானி செய்யிதினா முஹம்மத் ஸாலிஹ் (ரஹ்) பெரிய மௌலானா அவர்களினதும் மனாகிப் மஜ்லிஸின் தமாம் நிகழ்வும் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை அஸர் தொழுகையின் பின்னர் கலீபத்துஷ் ஷாதுலி மௌலவி எம்.ஐ.எம். ரபீக் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறவுள்ளன.

# போதையில் வாகனம் செலுத்தியவருக்கு சிறை

## பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பு




போதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு ஒருமாதகால சிறைத்தண்டனை விதித்துள்ள பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் சாரதி அனுமதிப்பத்திரத்தையும் ஒரு வருடத்துக்கு இரத்துச்செய்துள்ளது.

இந்த உத்தரவு நேற்று (13) பிறப்பிக்கப்பட்டது.

பருத்தித்துறை - கொடிகாமம் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்து ஒன்றின் சாரதி, நேற்று மதுபோதையில் நிதானமில்லாமல் பேருந்தைச் செலுத்தியதை அவதானித்த நெல்லியடி போக்குவரத்துப் பொலிஸார் அவரைக் கைதுசெய்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோதே நீதிவான் நீதிமன்றம் மேற்கண்ட தீர்ப்பை வழங்கியது.

# நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டு; சனத் நிஷாந்தவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு



நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறப்படும் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 03 மனுக்கள் தொடர்பான விசாரணையை செப்டெம்பர் 27ஆம் திகதி வரை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இந்த மனுக்கள் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ. மரிக்கார் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே மேற்குறித்த விசாரணை ஒத்திவைக்கப்பட்டது .

சட்டமா அதிபர் தரப்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல், இந்த முறைப்பாடு தொடர்பில் குரல் பரிசோதனை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அதனை அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்தினர் முன்னிலையில் மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

அப்போது, மனுவொன்றை சமர்ப்பித்திருந்த இலங்கை நீதித்துறை அதிகாரிகள் சங்கம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இவ்வாறான விசாரணையின்றி இந்த மனுவைப் பராமரிப்பதில் தமக்கு ஆட்சேபனை இல்லை எனத் தெரிவித்தார்.

அதன்படி, மேற்படி விசாரணை செப்டெம்பர் 27ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த மனுக்களை பிரியலால் சிறிசேன மற்றும் விஜித குமார ஆகிய இரு சட்டத்தரணிகள் மற்றும் இலங்கை சிரேஷ்ட அதிகாரிகள் சங்கம் தாக்கல் செய்துள்ளன.

ஓகஸ்ட் 23, 2022 அன்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய சனத் நிஷாந்த, மக்கள் போராட்ட செயற்பாட்டாளர்களுக்கு பிணை வழங்குவதில் நீதவான்கள் செயற்பட்ட விதத்தை விமர்சித்திருந்தார்.

அதன்மூலம் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாகவும் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் மேன்முறையீட்டு நீதிமன்றில் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கள்ளக்காதலியுடன் இணைந்து சமையல் பாத்திரங்கள் திருட்டு

கலஹா நிருபர்

கள்ளக்காதலியுடன் இணைந்து ஐந்து வீடுகளில் சமையலறை உபகரணங்களைத் திருடி ஐந்து இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்த இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கண்டி 01 ஆம் இலக்க நீதிமன்ற மேலதிக நீதவான் மொஹமட் ராபிக் உத்தரவிட்டார்.

இதன்போது மேற்குறிப்பிட்ட சந்தேக நபர்களில் ஒருவரான 45 வயது பெண்ணின் கணவர் வெளிநாட்டில் உள்ளமையால் இவர்களின் ஐந்து பிள்ளைகளையும் கவனித்துக்கொள்ள வேறுயாரும் இல்லை என்பதால் அப்பெண்ணை பிணையில் செல்ல நீதவான் அனுமதித்ததுடன் மூன்று பிள்ளைகளின் தந்தையான ஊர் மக்களினால் (குஸ்சி ஹொரா) சமையலறைத் திருடன் என அழைக்கப்படும் 44 வயது சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதாகத் தெரியவருகிறது.

சந்தேக நபர்கள் கலஹா, தெல்தொட்டை, குகுலபான, போப்பிட்டிய பிரதேச வீடுகளிலேயே ரைஸ் குக்கர், எரிவாயு சிலிண்டர், கேஸ் அடுப்புகள், கிரைண்டர்கள் உட்பட பல பொருட்களைத் திருடியுள்ளமை தொடர்பாக கலஹா பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்திய பொழுதே மேற்கண்ட உத்தரவை நீதவான் பிறப்பித்தார்.

# சடலங்களை எரிக்கின்ற புகை வீடுகளுக்குள் வருகிறது : மயானத்தை மாற்றுங்கள்

## கல்லுண்டாய் குடியேற்றத் திட்ட மக்கள் கோரிக்கை





ஆனைக்கோட்டை - கல்லுண்டாய் இந்து மயானத்தில் சடலங்களை எரிக்கின்றபோது புகை வீடுகளுக்குள் வருகின்றது. அந்தப் புகையை நாங்கள் சுவாசிப்பதால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றோம் என கல்லுண்டாய் குடியேற்றத்திட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் கல்லுண்டாய் பகுதியில் நாம் குடியமர்த்தப்பட்டோம். ஆனால், எங்களுக்கான அடிப்படை வசதிகள் எவையும் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

எங்களது குடியேற்றத்திட்டத்தில் இருந்து சுமார் 30 மீற்றர் தொலைவில் ஆனைக்கோட்டை - கல்லுண்டாய் மயானம் அமைந்துள்ளது. அந்த மயானத்தில் சடலங்களை எரிக்கின்றபோது அந்தப் புகை எமது வீடுகளுக்குள் வருகின்றது.

இந்தப் புகையை சுவாசிப்பதால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் நோய்த்தாக்கத்துக்குள்ளாகின்றனர்.

எனவே, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உடனடியாக இதனைக் கவனத்தில் கொண்டு, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் வழங்கிய காணியில் மயானத்தை அமைப்பதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கம்பஹா மாவட்டத்தில் நீர் விநியோகத் தடை



பேருவளை செய்தியாளர்

சப்புகஸ்கந்த மின்சார சபையின் அவசர திருத்த வேலைகள் காரணமாக எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை நீர் வெட்டு பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

பேலியகொட, வத்தளை, ஜா–எல, கட்டுநாயக்க – சீதுவ நகரசபை பகுதிகள், களனி, வத்தளை, பியகம, மஹர, தொம்பே, ஜா–எல, கட்டானை, மினுவாங்கொடை ஆகிய பிரதேச சபைப் பகுதிகள் மற்றும் கம்பஹா பிரதேச சபை எல்லையில் சில பகுதிகள் நீர் விநியோகத் தடையினால் பாதிக்கப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாகப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

# இரத்தினபுரி, இறம்புக்கந்தை தமிழ் வித்தியாலயத்துக்கு குடிநீர் வழங்கிவைப்பு





தலவாக்கலை நிருபர்

கிளிநொச்சி, வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் 1993 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர மாணவர்கள், வட்டக்கச்சியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. கலைமதி கோபாலப்பிள்ளை மற்றும் திருமதி. பார்கவி ஆகியோரின் நிதி அனுசரணையில் 96 வருடங்கள் குடிநீரின்றி அவதியுற்ற இரத்தினபுரி இறம்புக்கந்தை தமிழ் வித்தியாலயத்துக்கு சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டது. திருமதி சிவநிதியின் (சுவிட்சர்லாந்து) கரங்களினால் மாணவர்களின் பயன்பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டது.



# மாறுவேடத்தில் விகாரையை விட்டு வெளியேறிய தேரர் சடலமாக மீட்பு

ஹதரலியத்த பிரதேச விகாரையொன்றின் பிரதமகுரு முருத்தெனிய சீலரதன தேரர், சாரம் மற்றும் ரீஷேர்ட், தொப்பி அணிந்த நிலையில் வீதியில் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பில் ஹதரலியத்த பொலிஸார் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பௌத்த பிக்குவின் சடலம் நேற்றுமுன்தினம் (12) காலை விகாரையில் இருந்து சுமார் 600 மீற்றர் தொலைவில் வீதியில் கண்டெடுக்கப்பட்டது. 67 வயதான பிக்குவே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

சடலத்தின் அருகே காய்கறிகள் உள்ள பையொன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.வீதியில் ஒருவர் விழுந்து கிடந்ததை அவதானித்த மக்கள், அவர் யார் என ஆராய்ந்தபோது, விகாரையின் தலைமை விகாராதிபதி என்பது தெரியவந்துள்ளது.

இவர் நேற்று முன்தினம் இரவு விகாரையில் தங்கியிருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அவர் நள்ளிரவில் விகாரையை விட்டு வெளியேறியிருக்கலாம் என்றும் திரும்பி வரும் வழியில் அவர் இறந்திருக்கலாம் என்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விகாரையில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இடத்துக்கு மாறுவேடத்தில் பிக்கு பயணித்துள்ளதாக பொலிஸாருக்கு சந்தேகம் எழுந்துள்ளது. பிக்கு சடலமாகக் காணப்பட்ட இடத்தில் அவரது கைத்தொலைபேசியும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை ஆய்வு செய்ததன் மூலம் தொடர்பில் இருந்தவர்களை அடையாளம் காண முடியும் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழ்ப்பாணத்தில் திருட்டு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எஸ். குலநாயகத்தின் வீட்டில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு அருகிலுள்ள வீட்டிலேயே குறித்த திருட்டுச் சம்பவம் பதிவானது.

வீட்டில் இருந்தவர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்த சமயத்தில், வீட்டுக்குள் புகுந்த திருடர்கள், இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் ஒருதொகைப் பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# இன்று விண்ணில் பாய்கிறது சந்திரயான்- 3

## விண்கல மாதிரியுடன் திருப்பதியில் இஸ்ரோ விஞ்ஞானிகள் சாமி தரிசனம்




நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்வதற்காக சந்திரயான்- 3 விண்கலம் இன்று(14) பிற்பகல் 2.35 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து எல்.வி.எம்.-3 ஏவூர்த்தி மூலம் விண்ணில் ஏவப்படவுள்ளது.

இதற்கான இருபத்தி ஐந்தரை மணி நேர கவுண்ட்டவுன் நேற்று(13) பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமானது.

இந்நிலையில், சந்திரயான்- 3 விண்கலத்தின் சிறிய மாதிரியுடன் இஸ்ரோ விஞ்ஞானிகள் திருப்பதி ஏழுமலையான் ஆலயத்தில் நேற்று காலை தரிசனம் செய்தனர்.

நிலவின் தரைப்பரப்பின் தன்மை, சூழல் ஆகியவற்றை சந்திரயான்- 3 விண்கலத்திலுள்ள லேண்டர் மற்றும் ரோவர் கலன்கள் ஆய்வு செய்யவுள்ளன. அதன்படி, நிலவின் தரைப்பரப்பில் மின்னூட்ட அதிர்வுகள், நிலநடுக்க அதிர்வுகள், தட்பவெப்ப நிலை ஆகியவை பரிசோதிக்கப்படவுள்ளன. அதற்காக நிலவின் தரைப்பரப்பில் சென்சார் மூலம் 10 சென்ரிமீற்றர் ஆழத்துக்கு துளையிட்டு ஆய்வு செய்யப்படவுள்ளது.



லேண்டர் மற்றும் ரோவர் கலன்களின் ஆயுள்காலம் மொத்தம் 14 நாட்களாகும். அதற்குள்ளாக அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தகவல்கள் அனுப்பப்படவுள்ளன.



# புனித குர்ஆன் அவமதிப்புக்கு எதிராக ஐ.நாவில் தீர்மானம் நிறைவேறியது

## பாக். பிரேரணைக்கு இந்தியா உட்பட 28 நாடுகள் ஆதரவு; 12 நாடுகள் எதிர்ப்பு



இஸ்லாமிய புனித குர்ஆனை அவமதிக்கும் செயற்பாடுகளுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் ஐ.நா. மனித உரிமை பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்காக ஐ.நா. பாகிஸ்தான் புதன்கிழமை கொண்டுவந்த வரைவுத் தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா உள்ளிட்ட 28 நாடுகள் வாக்களித்துள்ளன.

47 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. மனித உரிமை பேரவையில் இந்தத் தீர்மானத்துக்கு இந்தியா, பங்களாதேஷ், சீனா, கியூபா, மலேஷியா, மாலைத்தீவு, கட்டார், உக்ரைன், ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட 28 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, பெல்ஜியம் உட்பட 12 நாடுகள் எதிராக வாக்களித்துள்ளன. 07 நாடுகள் இந்த வாக்கெடுப்பை புறக்கணித்துள்ளன.

| YES - 28 | | ABSTENTION - 7 / NO - 12 |
|---|---|---|
| Algeria | Maldives | Mexico |
| Argentina | Morocco | Nepal |
| Bangladesh | Pakistan | Paraguay |
| Bolivia | Qatar | Belgium |
| Cameroon | Senegal | Costa Rica |
| China | Somalia | Czech Republic |
| Cuba | South Africa | Finland |
| Eritrea | Sudan | France |
| Gabon | Ukraine | Germany |
| Gambia | UAE | Lithuania |
| India | Uzbekistan | Luxembourg |
| Ivory Coast | Vietnam | Montenegro |
| Kazakhstan | Benin | Romania |
| Kyrgyzstan | Chile | UK |
| Malawi | Georgia | US |
| Malaysia | Honduras | |

வன்முறையைத் தூண்டும் வகையில் மத வெறுப்புக்குக் காரணமான செயற்பாடுகளைத் தடுக்கவும், அவற்றுக்கு எதிரான நடவடிக்கைக்கு தடையாக உள்ளவற்றை அடையாளம் காணும் வகையில் உறுப்பு நாடுகள் தங்களது சட்டங்கள், கொள்கைகள், சட்ட அமுலாக்கத்தை ஆராய வேண்டும் எனவும் அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையர் வோல்கர் தூர்க் தெரிவிக்கையில்,

''கோடிக்கணக்கான மக்கள் நம்பிக்கை வைத்துள்ள திருக் குர்ஆனை எரித்த சம்பவத்தையடுத்து இந்தத் தீர்மானம் விவாதிக்கப்பட்டுள்ளது. மக்களிடையே பிளவை ஏற்படுத்தவும் கோபத்தை ஏற்படுத்தி வன்முறையைத் தூண்டும் வகையிலும் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றன'' - என்றார்.

சுவீடன் தலைநகர் ஸ்டொக்ஹோமில் கடந்த மாதம் ஹஜ் பெருநாளைமுன்னிட்டு அரசின் அனுமதியுடன் போராட்டம் நடைபெற்றது. அப்போது, அங்குள்ள பள்ளிவாசலுக்கு வெளியே ஈராக்கைச் சேர்ந்த கிறிஸ்தவர் ஒருவர் திருகுர்ஆனை தீயிட்டு எரித்தார். இந்த சம்பவத்துக்கு இஸ்லாமிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இந்நிலையில் ஐ.நா.வில் பாகிஸ்தானால் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், சுவீடனில் புனித குர்ஆன் எரிக்கப்பட்டதை தாம் வன்மையாக காண்பதற்காக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கருத்து சுதந்திரம் என்ற போர்வையில் அமைதியின்மைக்கு இடமளிக்க வேண்டாம் என்றும் தெற்கின் பூகோள விழுமியங்களுக்கு மதிப்பளிக்குமாறும் மேற்கத்தேய நாடுகளை கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலக செய்திகள்

# சூடானில் 31 இலட்சம் பேர் இடம்பெயர்வு



சூடானில் இராணுவத்துக்கும் துணை இராணுவப் படைக்கும் இடையே இடம்பெற்றுவரும் மோதலால் சுமார் 31 இலட்சம் பேர் புலம்பெயர்ந்துள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ.நாவின் சர்வதேச அகதிகள் நலப் பிரிவு தெரிவிக்கையில்,

சூடானில் இராணுவத்துக்கும் ஆர்எஸ்எஃப் துணை இராணுவப் படைக்கும் இடையே கடந்த இரண்டரை மாதங்களுக்கு மேல் நடைபெற்றுவரும் மோதல் காரணமாக 31 இலட்சம் பேர் தங்களின் இருப்பிடங்களைவிட்டு வெளியேறி தவித்து வருகின்றனர்.

புலம் பெயர்ந்தவர்களில் 7.38 இலட்சம் பேர் சர்வதேச அகதிகளாகியுள்ளனர். அவர்கள், அண்டை நாடுகளான எகிப்து, சாட் போன்ற நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

எகிப்தில்தான் அதிகபட்சமாக 02 இலட்சத்து 55 ஆயிரத்து 500 பேரும் சாட்டில் 2.38 இலட்சம் பேரும் தென்சூடானில் 1.61 இலட்சம் பேரும் தஞ்சமடைந்துள்ளனர் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

# இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு கப்பல் போக்குவரத்து

நாகப்பட்டினத்துக்கு மாற்றாக, இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்க மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தவுள்ளது.

இலங்கையிலிருந்து தமிழகம், கேரளா, மஹாராஷ்டிரா மாநிலங்களுக்கு தனியார் சொகுசு கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதேபோல, இலங்கையிலிருந்து புதுச்சேரிக்கு கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க இருநாட்டு அரசுகளும் முன்வந்தன.

இதற்காக இலங்கையின் காங்கேசன்துறை துறைமுகத்தில், கப்பல் அணையும் மேடை, பயணிகள் தங்குமிடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், புதுச்சேரிக்கு பதிலாக காரைக்காலிலிருந்து கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க மத்திய அரசு விரும்பியது.

இதனால், எந்த பணியும் இங்கு மேற்கொள்ளப்படவில்லை. தற்போது, நாகப்பட்டினத்திலிருந்து கப்பலை இயக்க மத்திய அரசு முன்வந்துள்ளது. இதனால், பணிகள் இழுபறியாகவுள்ளன.

இதனிடையே, தமிழக கடல்சார் அமைப்பு வாயிலாக, இராமேஸ்வரம் - தலைமன்னார் மற்றும் இராமேஸ்வரம் - காங்கேசன்துறை ஆகிய வழித்தடங்களில், கப்பல் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுதொடர்பான அறிவிப்பும் சட்டசபையில் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, நாகப்பட்டினத்துக்கு பதிலாக, இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு கப்பல் போக்குவரத்தை தொடங்க தமிழக அரசு விருப்பம் தெரிவித்துள்ளது.

இதற்காக, மத்திய அரசுடன் நிதியை பகிர்ந்து கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து மத்திய அரசிடம், தமிழக சிறு துறைமுகங்கள் துறை வாயிலாக வலியுறுத்தப்படவுள்ளது.



# தந்தையினதும் மகனினதும் விக்கெட்களை வீழ்த்திய அஸ்வின்




இந்திய மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமான நிலையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி அஸ்வினின் சுழலில் 150 ஓட்டங்களில் சுருண்டு போனது.

இந்த போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டெக்னரைன் சந்திரபோலின் விக்கெட் ரவிச்சந்திரன் அஸ்வின் வீழ்த்தினார். அஸ்வின் 2011ஆம் ஆண்டில் சிவ்நரைன் சந்தர்பால் விக்கெட்டை எடுத்தார். அதன்பிறகு 2023ஆம் ஆண்டில் சிவ்நரைன் சந்தர்பால் மகன் டி சந்தர்பால் விக்கெட்டை எடுத்தார்.

இதன் மூலம், தந்தை மற்றும் மகன் ஆகியோரது விக்கெட்களை எடுத்த முதல் இந்திய பௌலர் என்ற வரலாற்று சாதனையை அஸ்வின் படைத்தார்.

தந்தையையும் மகனையும் வெளியேற்றிய பந்து வீச்சாளர்கள்

1. இயன் போத்தம் (இங்கிலாந்து) : லான்ஸ் – கிறிஸ் கேரின்ஸ்
2. வாசிம் அக்கரம் (பாகிஸ்தான்) : லான்ஸ் – கிறிஸ் கேரின்ஸ்
3. மிட்சேல் ஸ்டார்க் (அவுஸ்திரேலியா) : சிவ்நரேன் சந்தர்பால் – தக்நரேன் சந்தர்பால்
4. சைமன் ஹர்மார் (தென்னாப்பிரிக்கா) : சிவ்நரேன் சந்தர்பால் – தக்நரேன் சந்தர்பால்
5. ரவிச்சந்திரன் அஸ்வின் : சிவ்நரேன் சந்தர்பால் – தக்நரேன் சந்தர்பால்

# ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற நதீஷா




25ஆவது ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் நேற்று பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் இலங்கையின் நதீஷா ராமநாயக்க தங்கப் பதக்கத்தை வென்றார்.

நேற்று முன்தினம் தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் ஆரம்பமான 25ஆவது ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ள போட்டிகளில் இலங்கையில் இருந்து 13 வீர, வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இதில் தொடரின் முதல் நாளான நேற்று முன்தினம் இலங்கைக்கு இரு வெண்கலப்பதக்கங்கள் கிடைத்தன. பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் கயன்திகா அபேரத்னவும் பெண்களுக்கான ஈட்டி எறிதலில் நதீகா லேக்கம்கேவும் வெண்கலப் பதக்கங்களை வென்று அசத்தினர்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற போட்டிகளில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 400 மீற்றர் இறுதிப் போட்டிகளில் இலங்கையர் மூவர் பங்கேற்றனர். இதில் நதீஷா ராமநாயக்க 52.61 செக்கன்களில் தூரத்தை கடந்து தங்கப்பதக்கத்தை வென்றார்.

உலக பரா மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் - 2023




# ஈட்டி எறிதலில் வெண்கலப் பதக்கம் வென்ற இலங்கை

பாரிஸ் நகரில் நடைபெற்றுவரும் உலக பரா மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் ஆடவருக்கான எவ்-64 வகை ஈட்டி எறிதல் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய சமித்த துலான் நேற்று வெண்கலப் பதக்கத்தை தனதாக்கினார்.

முன்னதாக டோக்கியோ பராலிம்பிக்கில் பதக்கம் வென்ற சமித்த துலான் 64.06 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்து உலக பரா மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் தனது முதல் பதக்கத்தை கைப்பற்றினார்.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# சம்பியனானது முனைக்காடு இராமகிருஸ்ணா அணி

கல்லடி செய்தியாளர்




முனைக்காடு இராமகிருஸ்ணா விளையாட்டுக் கழகத்தின் 54ஆவது ஆண்டு நிறைவை சிறப்பித்தும் உயிர்நீத்த உறவுகளின் ஞாபகார்த்தமாகவும் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முனைக்காடு இராமகிருஸ்ணா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் முனைக்காடு இராமகிருஸ்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் 36 அணியினர் பங்கேற்றிருந்தன. இச்சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டிக்கு முனைக்காடு இராமகிருஸ்ணா அணியினரும் மகிழடித்தீவு மகிழை இளைஞர் அணியினரும் தெரிவாகினர். இதில் 1:0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் முனைக்காடு இராமகிருஸ்ணா விளையாட்டுக்கழகம் வெற்றிவாகை சூடியது.

இச்சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டிக்கு இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றிக்கிண்ணங்களையும் பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

# அல் - இஸ்ஸத் விளையாட்டுக் கழகத்தின் மின்னொளி கிரிக்கெட் சுற்றுப்போட்டி: சம்பியன் கிண்ணம் பொத்துவில் ரொக் சலஞ்சர்ஸ் வசம்

பொத்துவில் நிருபர்

பொத்துவில் அல் - இஸ்ஸத் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட மின்னொளி மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் பொத்துவில் ரொக் சலஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தினையும் பணப்பரிசினையும் சுவீகரித்துக்கொண்டது.

குறித்த சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிறன்று களப்புக்கட்டு இறால்பாம் பொது மைதானத்தில் இடம்பெற்றது. இறுதிப் போட்டியின் போது பொத்துவில் ரொக் சலஞ்சர்ஸ் மற்றும் பவர்போய்ஸ் ஆகிய அணிகள் மோதிக்கொண்டன. இதில் ரொக் சலஞ்சர்ஸ் அணியினர் 05 விக்கெட்களினால் வெற்றியினை தனதாக்கிக் கொண்டனர்.



இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக ரொக் சலஞ்சர்ஸ் அணியின் சஜீரும் சுற்றுத் தொடரின் சிறப்பாட்டக்காரராக பவர்போய்ஸ் அணியின் அக்ரமும் தெரிவு செய்யப்பட்டனர். வெற்றிபெற்ற அணிக்கு 25ஆயிரம் ரூபா பணப்பரிசும் வெற்றிக்கிண்ணமும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அல் - இஸ்ஸத் விளையாட்டுக் கழத்தின் தலைவரும், பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான என்.எச். முனாஸ், அக்கழகத்தின் செயலாளர் ஏ.எம்.மனாசீர், தொழிலதிபர்களான எம்.எஸ்.எம். உவைஸ், ஏ.ஆர்.எம். சர்ஜுன் உள்ளிட்ட பலர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7